பக்கங்கள் :எட்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2038 ஆனி 08 வெள்ளிக்கிழமை (22.06.2007) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 205

## ‘உதயன்’, ‘சுடர் ஒளி’ ஆசிரியரைத் தேடிய வெள்ளை வான்
## அரச உயர்மட்டக் குழுவினர் நேரில் விரைந்து விசாரணை

கொழும்பு, ஜூன் 22

‘உதயன்’, ‘சுடர் ஒளி’ பத்திரிகைகளின் ஆசிரியர் என்.வித்தியாதரனின் கொழும்பு வெள்ளவத்தை, ஹம்டன் லேன் இல்லத்திற்கு வெள்ளை வான் குழு சென்று அச்சுறுத்தும் வகையில் நடந்து கொண்டமை குறித்து உயர் மட்ட விசாரணைக்கு அரசு உத்தர விட்டிருக்கின்றது.

கடத்தல், காணாமற்போனோர் போன்ற சர்ச்சைகள் குறித்து ஆராய்வதற்காக அமைச்சர்களை உள்ளடக்கிய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நியமித்துள்ள உயர் மட்டக் குழு இந்த அச்சுறுத்தல் விவகாரத்தை தனது முதல் விசாரணை நடவடிக்கையாக எடுத்துக்கொண்டு செயற்பாட்டைத் தொடங்கியிருக்கிறது.

இக்குழு நேற்று பத்திரிகை ஆசிரியர் வித்தியாதரனின், இல்லத்துக்கு நேரடியாகச் சென்று விடயங்களைக் கேட்டறிந்தது டன், உரிய பாதுகாப்பு முன்னேற்பாடுகளைச் செய்வது குறித்து பொலிஸ்மா அதிபர் மற்றும் சம்பந்தப்பட்ட பிரிவுப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஆகியோருடன் கலந்துரையாடி உரிய நடவடிக்கை எடுப்பதாகவும் உறுதியளித்தது.

அமைச்சர்கள் ராஜித சேனாரத்ன, கே.ஏ.பாயிஸ், பெ. இராதாகிருஷ்ணன் மற்றும் கொழும்பு மாநகர சபை எதிர்க்கட்சித் தலைவர் வாசுதேவ நாணயக்கார ஆகியோர் அடங்கிய குழுவினரே பத்திரிகை ஆசிரியரின் இல்லத்துக்குச் சென்று அங்கு அவருடனும் ‘உதயன்’, ‘சுடர்ஒளி’ பத்திரிகைகளின் நிர்வாக இயக்குநர் ஈ.சரவணபவனுடனும் சுமார் ஒரு மணிநேரம் பேச்சு நடத்தியது.

‘உதயன்’, ‘சுடர் ஒளி’ பத்திரிகைகள் அண்மைக்காலத்தில் மோசமாக எதிர்நோக்கிவரும் அச்சுறுத்தல்கள் பற்றிய விளக்க - விவரங்கள் - அடங்கிய கோவை ஒன்றை நிர்வாக இயக்குநர் ஈ.சரவணபவன் மேற்படி உயர்மட்டக் குழுவிடம் கையளித்தார்.

மேற்படி ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட ஐவர் குழுவில் இடம்பெற்றுள்ள ஒருவரான அமைச்சர் டலஸ் அழகப்பெரும நேற்றைய சந்திப்பில் பங்குபற்றவில்லை. வேறு தனிப்பட்ட குடும்ப நிகழ்வு ஒன்றில் பங்குகொள்ள வேண்டியிருப்பதால் இச்சந்திப்புக்குத் தாம் வரமுடியவில்லை என்ற தகவலை அவர் பத்திரிகை ஆசிரியருக்குத் தெரியப்படுத்தியிருந்தார்.

மேற்படி உயர்மட்டக் குழு நேற்று முதல் முழு அளவில் செயற்படத் தொடங்கியுள்ளதாகவும், முதல் நடவடிக்கையாக பத்திரிகையாளர் வித்தியாதரன் மிரட்டப்பட்ட (08 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ் மாவட்டங்களில் உள்ளூராட்சித் தேர்தல் நடத்தும் உகந்த சூழ்நிலை இப்போது இல்லை
### தேர்தல் ஆணையாளருக்கு அரச அதிபர்கள் எடுத்துரைப்பு

கொழும்பு,ஜூன் 22

தமிழ் மாவட்டங்களில், கடந்த வருடத்தில் ஒத்திவைக்கப்பட்ட உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்களை, இப்போது நடத்துவதற்கு உகந்த சூழ்நிலை இல்லை.

தேர்தல்களை உரிய விதிமுறைப்படி செவ்வனே நடத்தும் சாத்தியம் அறவே இல்லை. மக்களின் வாழ்க்கை முழுமையான இயல்பு நிலைக்குத் திரும்பாதவரை தமிழ் மாவட்டங்களில் எந்தத் தேர்தலையும் நடத்துவது சாத்தியமில்லை.

இவ்வாறு தேர்தல் ஆணையாளர் தயானந்த திசநாயக்காவின் பணிப்பின் பேரில் அவரை நேற்றுக் கொழும்பில் சந்தித்த ஆறு தமிழ் மாவட்டங்களின் அரச அதிபர்கள் எடுத்துக் கூறியதாக அறியவந்தது.

தமிழ் மாவட்டங்களில் மக்களின் சுதந்திரமான நடமாட்டம் தடைப்பட்டுள்ளமை, அவர்களின் இயல்பு வாழ்க்கை முழுமையான நிலைக்குத் திரும்பாமை, அரசியல் நடவடிக்கைகளை வழமைபோல் மேற்கொள்ள முடியாத நிலைமை, இராணுவ நடவடிக்கைகளால் மக்களின் இடம்பெயர்வுகளும் அவர்கள் நலன்புரி நிலையங்களில் தங்கியிருக்கும் அசாதாரண சூழ்நிலை ஆகிய காரணங்களால் உள்ளூராட்சி சபைத் தேர்தலைஇப்போதைக்கு நடத்துவது உகந்ததல்ல; அசாத்தியமானது - என்று அரச அதிபர்கள் தேர்தல் ஆணையாளரிடம் எடுத்துக் கூறியதாக அறியவந்தது.

வன்னிப் பிரதேசத்துக்குரிய உள்ளூராட் (08 ஆம் பக்கம் பார்க்க)

## பஸில் ராஜபக்ஷவுடன் அரச அதிபர்கள் ஆராய்வு

கொழும்பு, ஜூன் 22

வடக்கு கிழக்கு பகுதியின் மாவட்டங்களின் தற்போதைய நிலை குறித்து அரச அதிபர்களுடன் ஜனாதிபதியின் ஆலோசகர் பஸில் ராஜபக்ஷ நேற்று ஆராய்ந்தார்.

வடக்கு மாகாண அரச அதிபர்கள், மட்டக்களப்பு அரச அதிபர் ஆகியோர் இச்சந்திப்பில் கலந்து கொண்டனர்.

உணவு நிலைமை, அத்தியாவசிய சேவை (08 ஆம் பக்கம் பார்க்க)

## முன்னரங்க நிலைகளை நோக்கி ஷெல் தாக்குதல்கள்

உடுப்பிட்டி,ஜூன் 22

நாகர்கோயில், கிளாலி முன்னரங்க நிலைகளை நோக்கி நேற்று மாலை 3 மணிமுதல் தொடராக ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இரவுவரை இத் தாக்குதல் தொடர்ந்தது.

முள்ளி, வரணி, வளலாய் ஆகிய இடங்களில் இருந்தே இத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. அதேவேளை - வடமராட்சி கடற்பகுதியில் ஹெலி ஒன்று தாளப்பறந்து நோட்டமிட்டது. (அ-1-155)

## விமான மூலம் கொழும்பு சென்ற மூவர் கைது

கொழும்பு, ஜூன் 22

யாழ்ப்பாணத்தில் இருந்து விமானம் மூலம் நேற்றுக் கொழும்பு வந்தமூவர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் இருந்து விமானம் மூலம் நேற்றுப்பிற்பகல் பயணம்செய்த இவர்கள் இரத்மலானை விமான நிலையத்தில் இருந்து வான் ஒன்றில் கொழும்புக்கு வரும்போது கல்கிஸைப் பகுதியில் வைத்துக் கைதுசெய்யப்பட்டுள்ளனர்என்று தெரிவிக்கப்பட்டது.

## மங்கள, சிறிபதி தலைமையில் இன்று ‘சு.கட்சி - மக்கள் பிரிவு’ உதயம்!

கொழும்பு, ஜூன் 22

முன்னாள் அமைச்சர்கள் மங்கள சமரவீர மற்றும் சிறிபதி சூரியாராய்ச்சி ஆகியோரின் தலைமையில் ‘ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி - மக்கள்பிரிவு’என்ற புதிய கட்சி இன்று உத்தியோகபூர்வமாக உதயமாகிறது.

நிட்டம்புவ - கொரகொல்லவில் உள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் ஸ்தாபகர் எஸ். டபிள்யூ. ஆர்.டி.பண்டாரநாயக்கவின் சிலைக்கு மாலை அணிவித்து - மரியாதை செலுத்திய பிறகு - தமது கட்சி உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்படும் என்று மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

இக்கட்சியின் ஊடாக பாரிய மக்கள் சக்தியைத்திரட்டி பிழையான வழியில் செல்லும் அரசை சரியான வழிக்குக் கொண்டு வரப் போவதாகவும் உரிய தருணத்தில் அரசைக் கவிழ்த்து நல்லாட்சி ஒன்றை நிலைநாட்டப் போவதாகவும் அவர் கூறினார்.

இது தொடர்பாக நாட்டின் மீது அக்கறையுள்ள எல்லாக்கட்சிகளுடனும் - எல்லா அமைப்பினருடனும் - மூவின மக்களுடனும் திறந்த மனதுடன் இணைந்து செயலாற்ற (08 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.பல்கலை துணைவேந்தர் பதவிக்கு மூவர் பெயரைப் பேரவை தெரிவுசெய்தது

யாழ்ப்பாணம், ஜூன் 22

யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பதவிக்காக, பேரவையில் நேற்று நடைபெற்ற தேர்தலில் மூவர் சிபார்சு செய்யப்பட்டுள்ளனர்.

தற்போதைய பதில் துணைவேந்தரும் விஞ்ஞான பீடாதிபதியுமான பேராசிரியர் ஆர்.குமாரவடிவேல், உயர் பட்டப்படிப்புகள் பீடாதிபதி பேராசிரியர் க.கந்தசாமி, சமூகவியற்துறைத் தலைவர் என்.சண்முகலிங்கன் ஆகியோர் கூடுதல் புள்ளியின் அடிப்படையில் துணைவேந்தர் பதவிக்கு சிபார்சு செய்யப்பட்டுள்ளனர்.

நேற்றுப் பிற்பகல் 2 மணிக்கு கூடிய பல்கலைக்கழக பேரவை வாக்களிப்பின் மூலம் இந்த மூவரையும் சிபார்சு செய்தது.

மேற்படிமூவருடன் பொறியியல்கலாநிதி (08 ஆம் பக்கம் பார்க்க)

## சுண்டுக்குளியில் கிளைமோர் தாக்குதல் மூன்று படையினர் பலி; ஒருவர் காயம்

யாழ்ப்பாணம்,ஜூன் 22

சுண்டுக்குளியில், பழைய பூங்கா வீதியில் மறகுளத்துக்கு சமீபமாக நேற்று மாலை 5.20 மணிக்கு படையினரின் வாகனத்தை இலக்கு வைத்து கிளைமோர் தாக்குதல் நடத்தப்பட்டது.

இத்தாக்குதலில் மூன்று படையினர் பலியாகினர், ஒரு சிப்பாய் காயமடைந்தார்.

வீதிப் பணியில் ஈடுபட்டுள்ள படையினருக்கான மாலை உணவை எடுத்தச் சென்ற ‘டிராக்டர்’ மீதே இத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இத் தாக்குதலையடுத்து அந்தப் பகுதியைச் சுற்றிவளைத்த படையினர் சிலரை விசாரணைக்கு அழைத்துச் சென்றனர் என அறியவந்தது.

இந்தச் சம்பவத்தினால் சுண்டுக்குளிப் பகுதியில் மக்கள் பதற்றத்துடன் நேற்றைய இரவைக் கழித்தனர். (அ-1)



‘உதயன்’, ‘சுடர்ஒளி’ பத்திரிகைகளின் ஆசிரியர் என். வித்தியாதரனின் வெள்ளவத்தை இல்லத்துக்கு வெள்ளைவான் குழு சென்று அச்சுறுத்தல் விடுத்த சம்பவம் தொடர்பாக - அரச உயர் மட்டக்குழு நிர்வாக இயக்குநர் ஈ. சரவணபவன், ஆசிரியர் என் வித்தியாதரனுடன் நேரில் விசாரணை நடத்துவதை முதல் இரண்டு படங்களிலும் காணலாம். உயர் மட்டக்குழுவினர் நிர்வாக இயக்குநருடனும் ஆசிரியருடனும் இணைந்து நிற்பதை அடுத்துள்ள படத்திலும் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# 'தமிழ் நெற்' இணையத்தை அரசு முடக்கவேயில்லை!

## அடியோடு மறுக்கிறார் ஊடக அமைச்சர் யாப்பா

கொழும்பு, ஜூன் 22

'தமிழ் நெற்' இணையத்தளத்தின் சேவை முடக்கப்பட்டதற்கும் அரசுக்கும் எந்தச் சம்பந்தமும் கிடையாது.

- இவ்வாறு தகவல் ஊடகத்துறை அமைச்சர் அனுர பிரியதர்ஷன யாப்பா தெரிவித்திருக்கின்றார்.

அமைச்சரவைத் தீர்மானங்களை நாட்டுக்கு அறிவிக்கும் செய்தியாளர் மாநாடு நேற்று நடைபெற்றசமயம் செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த அமைச்சர் 'தமிழ் நெற்' குறித்துப் பிரஸ்தாபித்தார்.

'தமிழ் நெற்' இணையத்தளம் முடக்கப்பட்டதில் அரசு தொடர்பு படவே இல்லை. சம்பந்தப்படாத விடயத்துக்கு அரசு ஒருபோதும் பொறுப்பேற்க முடியாது - என்று அப்போது அமைச்சர் கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அரசின் உத்தரவிற்கமையவே 'தமிழ் நெற்' இணையத்தள சேவை தங்களால் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக இணையத்தள வழங்குநர்களான ஸ்ரீலங்கா ரெலிக்கொம் அதிகாரிகள் தெரிவித்திருந்தனர்.

ஆனால் 'தமிழ் நெற்' இணையத்தள சேவை கள் முடக்கப்பட்டமைக்கும் அரசிற்கும் எதுவித தொடர்பும்இல்லை. ஸ்ரீலங்கா ரெலிக்கொம் நிறுவனத்தின் பங்குகளில் அரைவாசிக்கு மேற்பட்ட பகுதி அரசிடமும் ஏனையவை தனியாரிடமும் உள்ளமை தெரிந்ததே. ஆனால் அரசு 'தமிழ் நெற்' இணையத்தள சேவையை முடக்குவதற்கு ஸ்ரீலங்கா ரெலிக்கொம் நிறுவனத்திற்கு உத்தரவு பிறப்பிக்கவில்லை.

'தமிழ்நெற்'இணையத்தள சேவை முடக்கப்பட்டிருப்பதற்கு அந்த இணையத்தளமே காரணமாக இருக்கலாம் - என்றும்அமைச்சர் யாப்பா தெரிவித்தார்.

இது குறித்து இராணுவப் பேச்சாளர் பிரசாத் சமரசிங்கவிடம் கேட்டபோது -

பாதுகாப்புத் தரப்பு தொடர்பான செய்திகளை அனைத்து இணையத்தளங்களுமேவெளியிடுகின்றன. ஆகவே, 'தமிழ்நெற்' இணையத்தளம் முடக்கப் பட்டமைக்கு தேசிய பாதுகாப்புத் தொடர்பான செய்திகளை வெளியிட்டமையே காரணம் என்ற குற்றச்சாட்டு பொருத்தமற்றது - என்றார். (சி)

# அரச உத்தரவின் பேரிலேயே முடக்கம் என்கிறது ரெலிகொம்

கொழும்பு, ஜூன் 22

'தமிழ் நெற்' இணையத்தள சேவையைத் துண்டிப்பதற்கான நடவடிக்கை எதனையும் தாம் எடுக்கவில்லை என இலங்கை அரசும் அரசுப்படைத் தரப்பும் அறிவித்தாலும் கூட, அரசின்உத்தரவின்பேரிலேயே அந்த சேவையை எவரும் பார்வையிடாமல் முடக்கும் நடவடிக்கையைத் தமது நிறுவனம் மேற்கொண்டது என, இணையத்தள சேவையை வழங்கும் 'டயலொக் ரெலிக்கொம்' தெரிவித்திருக்கின்றது.

'ரோய்ட்டர்' செய்தி நிறுவனம் இத்தகவலை வெளியிட்டிருக்கின்றது.

'டயலொக்' நிறுவனப் பேச்சாளர் ஒருவர் - தமது பெயர் குறிப்பிட விரும்பாமல் - இத்தகவலை புதன்கிழமை இரவு தெரிவித்தார் என்று 'ரொய்ட்டர்' கூறுகின்றது.

'ஸ்ரீலங்கா ரெலிக்கொம்' மின் இணையத்தள சேவை ஊடாக 'தமிழ் நெற்' இணையத் தகவலைப்பார்வையிட முடியாமல்இருக்கின்றது.

ஆனால் -

'தமிழ் நெற்' இணையத்தளத்தை தங்களது இணைய இணைப்பு ஊடாகப் பார்வையிட முடியாமல் தாங்கள் தடுக்கவில்லை என்றும், இவ்விவகாரம் குறித்துத் தாங்கள் விசாரித்து வருவதாகவும் 'ஸ்ரீலங்கா ரெலிக்கொம்' மின் சிரேஷ்ட இணைப்பதிகாரி பி. என். ஈ. அபேசேகரா ரோய்ட்டருக்குக் குறிப்பிட்டிருக்கின்றார்.

இவ்வாறு 'தமிழ் நெற்' முடக்கப்பட்டமை குறித்து முரண்பாடான தகவல்கள் வெளியாகின்றமை குறித்தும் அரசுத்தரப்பில் சரியான விளக்கம் இல்லை என்று 'ரொய்ட்டர்' சுட்டிக் காட்டுகின்றது.

கடந்த ஓகஸ்ட் 2006 முதல் புலிகளின் பிரதேசங்களுக்கு ஊடகவியலாளர்கள் செல்வது தடுக்கப்பட்டுள்ளது. இது பாதுகாப்புக் காரணங்களுக் கான கட்டுப்பாடு என அரசு கூறினாலும், புலிகளின் பிரசாரம் பரவாமல் தடுப்பதற்காகவே இந் நடவடிக்கை என உயரதிகாரி ஒருவர் கூறுகிறார் என 'ரொய்ட்டர்' மேலும் தெரிவிக்கின்றது.

இரண்டு தசாப்தகால சிவில் யுத்தத்துக்கு சமாந்தரமாக இப்போது புதிதாக கட்டவிழும் பிரசாரப் போரின் ஒரு கட்டமாகவே 'தமிழ் நெற்' இணையத்தள முடக்கத்தை நோக்கவேண்டும் என்றும் அந்த நிறுவனம் குறிப்பிடுகின்றது.

தமிழர்களின் பிரதேசமான வடக்கு, கிழக்கில் பல தமிழ் மொழி செய்திப் பத்திரிகைகள் தமதுபத்திரிகைகளை அச்சிட்டு விநியோகிக்க முடியாத இக்கட்டில் இருப்பதும் கவனிக்கத் தக்கது என்றும் 'ரொய்ட்டர்' தெரிவிக்கிறது.

இதற்கிடையில் - 'தமிழ் நெற்' இணையத் தளத்தை உள்நாட்டில் பார்வையிட முடியாமல் தடை செய்யும் ஊடகத்தணிக்கை முறையை உடனடியாகக் கைவிடுமாறு 'சர்வதேச ஊடகத்துறை சுதந்திரத்துக்கான எல்லை கடந்த செய்தியாளர் குழு' என்ற அமைப்பு இலங்கை அரசை வற்புறுத்திக் கேட்டிருப்பதாகவும் 'ரோய்ட்டர்' தெரிவித்திருக்கின்றது. (சி)

## 31ஆம் நாள் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை



எமது கல்லூரியின் முன்னாள் ஆசிரியர்
அமரர் ச. வேலுப்பிள்ளையின் அன்பு மனைவியும்
இக்கல்லூரியின் முன்னாள் உபஅதிபர் வே. முருகமூர்த்தி, பழைய
மாணவரும் பொறியியல்பீட விரிவுரையாளருமான
வே. சண்முகரத்தினம் ஆகியோரின் அன்புத் தாய்
**திருமதி பொன்னம்மா வேலுப்பிள்ளை**

**அவர்களின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை நாளாகிய இன்று அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.**

யா/யாழ்ற்றன் கல்லூரி, காரைநகர். (61860) ஆசிரியர்கழகம்.

## வட்டிக்காக நிறுத்தி வைக்கும் வரி சம்பந்தமாக சகல வங்கி வைப்பாளர்களுக்கும் விடுக்கும் முக்கிய அறிவித்தல்

2007 ஏப்ரல் 1ஆம் திகதி முதல் செயற்படும் விதத்தில் வட்டிக்காக நிறுத்தி வைக்கும் வரி சம்பந்தமாக புதிய நிபந்தனைகள் சம்பந்தமான அறிவுறுத்தல்கள் சகல வங்கி மற்றும் மற்றைய முதலீட்டு நிறுவனங்களுக்கு தேசிய வருமான வரித் திணைக்களத்தினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

**அந்த நிபந்தனைகள் பின்வருமாறு:**

01. செலுத்தும் வட்டிக்காக தற்போது நிறுத்தி வைக்கும் வரியின் வீதம் 10 %

02. குறிப்பிட்ட மதிப்பாண்டிற்காக மதிப்பீடு செய்ய வேண்டிய வருமானமானது (விடுபடும் வருமானத்தை தவிர்ந்த வட்டி உட்பட்ட முழு வருமானமும் உள்ளடக்கப்படும்). ரூபா 300,000 அதிகமாகாது என தனி ஒரு நபரினால் அல்லது புண்ணிய நிறுவனம் ஒன்றினால் எழுத்து மூலமாக வங்கிக்கு அறிவிக் கப்பட வேண்டும். அதற்கேற்ப அந்த மதிப்பாண்டிற்கான வட்டிக்காக வரிக் குறைப்பு ஒன்று மேற்கொள்ளப்பட்ாது.
மதிப்பீடு செய்ய வேண்டிய வருமானமானது ரூபா 300,000 அதிகமாக இருக்க வேண்டுமெனினும், ரூபா 600,000 அதிகமாகாத சந்தர்ப்பத்தில் அந்த மதிப்பீட்டு வருடத்திற்கான வரிக்காக 2.5 வீத வரிக் குறைப்பொன்றே மேற்கொள்ளப்படும்.
மேற்குறிப்பிட்ட 2 இல் குறிப்பிட்டுள்ளவாறு வரியிலிருந்து விலக்கு பெறுவதற்காக வைப்பாளர்கள் எழுத்து மூலமாக அறிவிக்க வேண்டியது கட்டாயமானதுடன், அவ்வாறான எந்தவொரு வரி அறவீட்டிலிருந்தும் தம்மை விடுவித்துக்கொள்வதற்கு அதற்கு தகுதி பெற்ற வைப்பாளர்கள் தமது வங்கிக் கிளை முகாமையாளருடன் கலந்தாலோசித்துவிட்டு கிளைக்கு ஒப்படைக்க வேண்டிய பிரகடனப் பத்திரத்தை பெற்றுக் கொள்ளுவது அவசியமாகும். தேசிய வரி மதிப்பீட்டுத் திணைக்களத்தின் அதிகாரிகள் கேட்கும் பட்சத்தில் அவ்வாறான பிரகடனப் பத்திரம் அவர்களின் பரிசோதனைக்கு உட்படுத்தப்படும்.

3. தனி ஒரு நபரினால் அல்லது புண்ணிய நிறுவனம் ஒன்றினால் நடத்திச் செல்லப்படும் சேமிப்புக் கணக்கின் வட்டி மாதத்திற்கு ரூபா 5,000க்கு குறைவெனின் நிறுத்தி வைக்கும் வரியிலிருந்து அது விடுபடும். ஒரே பெயரின் கீழ் பல்வேறுபட்ட சேமிப்புக் கணக்குகள் காணப்படின் இதற்கான விளக்கம் அளிக்கப்பட வேண்டும். மற்றைய சகல சேமிப்புக் கணக்குகளுக்கான வட்டி நிறுத்தி வைக்கும் வரிக்கும் உட்படும்.

4. வங்கிகளுக்கு வழங்கியுள்ள அறிவுறுத்தலின் படி நபர்களின் கூட்டு வைப்புக்களுக்கு வழங்கப்படும் வட்டி அந்நபர்களுக்கு இடையில் சமமாக பகிரப் படக்கூடியதாகும். ஒவ்வொரு நபருக்கும் ஒதுக்கப்படும் வட்டி வீதம் அந்நபருக்காகச் செலுத்தப்படும் வட்டியாகக் கருத்தில் கொள்ளப்படும்.

**மேலதிக விபரங்களுக்கும் மற்றும் தெளிவுபடுத்தல்களுக்கு வைப்பாளர்கள் தமது கிளை முகாமையாளரை அணுக முடியும்.**

★ இலங்கை வங்கி ★ மக்கள் வங்கி ★ கொமர்ஷல் வங்கி ★ தேசிய சேமிப்பு வங்கி
★ ஹற்றன் நஷனல் வங்கி ★ [illegible]

(அ 52733)

# மரண அறிவித்தல்கள்

## கந்தப்பு பூதத்தம்பி



(இளைப்பாறிய தபாலதிபர்)

மலேசியாவைப் பிறப்பிடமாகவும், கோப்பாய் வடக்கு, கோண்டாவில் கிழக்கை வசிப்பிடமாகவும் தற்போது இல. 24, **Launceston Road, Perivale, UB 6 7EU London** (லண்டன்) இல் வசித்தவருமாகிய கந்தப்பு பூதத்தம்பி 20.06.2007 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தப்பு - சின்னம்மா தம்பதியரின் புதல்வரும் கோண்டாவில் கிழக்கைச் சேர்ந்த காலஞ்சென்ற சின்னையா வைத்தியலிங்கம் - ஆச்சிப்பிள்ளை தம்பதியரின் மருமகனும் பூமணியின் அன்புக் கணவரும் ராஜ்குமார் (UK), ராஜி (UK) ஆகியோரின் பாசமிகு தந்தையும் வத்சலா (UK), இளங்கேசன் (UK) ஆகியோரின் அன்பு மாமனும் ரஜீவ், சுமித்தா, சர்மிலன் (UK) ஆகியோரின் அன்புப் பேரனும் திருமதி அன்னலெட்சுமி ஜெயரட்ணம் (SL), பூ.க. இராசத்தினம் (SL) காலஞ்சென்ற துரைசிங்கம் (SL), திருமதி இராசமணி கந்தசாமி (Swiss) ஆகியோரின் அன்புச் சகோதரரும் திருமதி பரமேஸ்வரி வேலாயுதபிள்ளை (UK), திருமதி புஸ்பவதி அருந்தவநாதன் (Australia), திருமதி சரோஜினி தேவி இராசரத்தினம் (SL), திருமதி மங்கலம் துரைசிங்கம் (Canada), வைத்திலிங்கம் ஜெயக்குமார் (Australia), திருமதி வத்லாஜெயக்குமார் (Australia) ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (23.06.2007) சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெற்று, Hendon Cremation, Holderi Hill Road, London N.W. 71 N.B இல் நண்பகல் 12 மணியளவில் தகனஞ்செய்யப்படும்.

*தகவல்:*
*மனைவி, பிள்ளைகள் - UK*
*தொலைபேசி 2089988450*
*சகோதரன் : பூ.க. இராசரத்தினம் (Wellawatte)*
*தொலைபேசி: 2582531*

## கந்தப்பிள்ளை அப்புக்குட்டி



சாயுடை, சட்டம்பியார் வளவு, தெல்லிப்பழை, மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகவும், பலாலியை வசிப்பிடமாகவும் தற்போது சுழிபுரத்தை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட கந்தப்பிள்ளை அப்புக்குட்டி 18.06.2007 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் சின்னாச்சிப் பிள்ளையின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான கந்தப்பிள்ளை - சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சின்னப்பிள்ளை - இளையபிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம், தம்பையா, செல்லையா, பொன்னு, செல்லம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற முத்ததம்பி மற்றும் சின்னத்தம்பி, காலஞ்சென்ற சின்னத்தங்கம் ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (23.06.2007) சனிக்கிழமை அவரது இல்லத்தில் முற்பகல் 10 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தனக்கிரியைக்காக சுழிபுரம் கேணியடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தகவல்:* (61856)

சுழிபுரம் மத்தி,
ஐக்கியசங்க ஒழுங்கை,
சுழிபுரம்.

*குணம் (மகன்), சிறி (மருமகன்), மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.*

## செல்வி பத்மநாதன் திருவருள்



(மண்டைதீவு)

மண்டைதீவைச் சேர்ந்த பத்மநாதன் திருவருள் நேற்று (21.06.2007) காலமாகிவிட்டார்.

அன்னார் பத்மநாதன் - முத்துலெட்சுமி தம்பதியரின் பாசமிகு மகளும் திருமகள் (சுவிஸ்), திருவாசுகி, திருவருட் செல்வன் ஆகியோரின் அன்புச்சகோதரியும் கிருபாகரன் (சுவிஸ்), கிருஷ்ணேஸ்வரன், சாந்தினி ஆகியோரின் மைத்துனியும் சந்தியா, விதுஜனன், நீருஜா, தனுஷியா ஆகியோரின் சிறிய தாயுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.06.2007) வெள்ளிக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் நண்பகல் 12 மணியளவில் கொக்குவில் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

49, அச்சுக்கூட ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு, (கொக்குவில் இந்துக் கல்லூரிக்கு அருகில்). (61856)

*தகவல்:*
**சி. பத்மநாதன் (தந்தை)**

## இரத்தினம் செல்வரட்ணம்



(பட்டம்மா)

உடுவில் வடக்கு, ஸ்ரீலங்கா வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இரத்தினம் செல்வரட்ணம் (பட்டம்மா) நேற்று (21.06.2007) வியாழக்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சி. இரத்தினத்தின் பாசமிகு மனைவியும் காலஞ்சென்ற மார்க்கண்டு - இளையாச்சி தம்பதியரின் மகளும் சுவிற்றி, வெனிற்றா (ஜேர்மனி), அன்ரன், வினித்தா (லண்டன்), விஜீவன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயும், ஜெயராஜசிங்கம், குணசிங்கம் (ஜேர்மனி), கனிஸ்ரெலா, உதயராஜ் (லண்டன்), உமா ஆகியோரின் அன்பு மாமியுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (22.06.2007) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் உடுவில் மல்வம் அப்போஸ்தலசபை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஸ்ரீ லங்கா வீதி,
உடுவில். (61857)

*தகவல்:*
**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தென்னிந்தியப் பேராயருக்கு நெடுந்தீவில் வரவேற்பு

நல்லூர்,ஜூன் 22

தென் இந்தியத் திருச்சபை யாழ்.பேராயத்தின் நான்காவது பேராயர் கலாநிதி டானியேல் செ.தியாகராஜா மற்றும் அவரது பாரியார் கலாநிதி தி.தயாளினி ஆகியோரை வரவேற்கும் நிகழ்வும் நெடுந்தீவு மத்தி, நெடுந்தீவு மேற்கு பகற் பராமரிப்பு நிலையங்களின் ஆண்டு நிறைவு விழாவும் இரு தினங்கள் நடைபெறவுள்ளன.

நெடுந்தீவு மத்தி பகற் பராமரிப்பு நிலையத்தின் 26 ஆவது ஆண்டு நிறைவு விழாவும் வரவேற்பு நிகழ்வும் நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு தென்னிந்திய திருச்சபை ஆலயத்தில் நடைபெறவுள்ளன.

நெடுந்தீவு மேற்கு பகற் பராமரிப்பு நிலையத்தின் 16 ஆவது ஆண்டு நிறைவு விழாவும் வரவேற்பு நிகழ்வும் நிலைய அரங்கில் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளன.

இந்த இரு நிகழ்வுகளின் போதும் பேராயர் செ.தியாகராஜாவுக்கும் பாரியாருக்கும் வரவேற்பு உபசாரம் இடம்பெறும்

(1-202-111)

## வாராந்தச் சொற்பொழிவு

வடமராட்சி,ஜூன் 22

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ, கலை பண்பாட்டுப் பேரவையினால் சந்நிதியான் ஆச்சிரமத்தில் வெள்ளி தோறும் நடத்தப்பட்டுவரும் வாராந்த நிகழ்வு வரிசையில் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு 'பெரிய புராணம்' பற்றிய தொடர் சொற்பொழிவு இடம்பெறும்.

இச்சொற்பொழிவை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர் அ.குமாரவேல் நிகழ்த்துவார்.

(203-160)

## ஊர்காவற்றுறையில் ஆய்வுகூட மருத்துவ சேவை

குருநகர்,ஜூன் 22

தீவகம் வடக்கு ஊர்காவற்றுறைப் பிரதேசத்தில் அமைந்துள்ள ஊர்காவற்றுறை மாவட்ட வைத்தியசாலையில் பிரதி வெள்ளிக்கிழமைகளில் நடமாடும் ஆய்வுகூட மருத்துவசேவை யாழ். பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் அலுவலகத்தால் நடத்தப்பட்டு வருகிறது.

இம்மருத்துவ சேவையை இப்பகுதி மக்கள் தவறாது பயன்படுத்தி பயனடையுமாறு ஊர்காவற்றுறை மாவட்ட வைத்திய அதிகாரி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

(203-51)

## நிகழ்வுகள்

உடுப்பிட்டி,ஜூன் 22

உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா நாளை சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு கல்லூரியில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் க.தருமலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கரவெட்டிப் பிரதேச செயலர் சி.சத்தியசீலன் கலந்துகொள்வார்.

(203-155-160)

* * *

யாழ்ப்பாணம்,ஜூன்22

ஹற்றன் நஷனல் வங்கி நடத்திய சிங்கிதி பத்தும் சீட்டிழுப்பில் வெற்றிபெற்றவர்களுக்கான பரிசில் வழங்கும் நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு வங்கியின் மானிப்பாய் கிளையில் இடம் பெறவுள்ளது. (203)

* * *

யாழ்ப்பாணம்,ஜூன்22

சுன்னாகம், ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் முன்னாள் அதிபர் வைசர் வி.சிவசுப்பிரமணியம் அவர்களின் 11ஆவது ஆண்டு நினைவுப் பேருரை இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலையின் சிவகுமாரன் மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

அதிபர் க.சிவாஜி தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் யாழ். பல்கலைக் கழக மருத்துவபீட உயிரியல் இரசாயனத் துறைப் பேராசிரியர் செல்வி வசந்தி அரசரத்தினம் 'யாழ்ப்பாணத்து உணவுப் பழக்கமும் போசாக்கும்' என்ற தலைலைப்பில் நினைவுப் பேருரை நிகழ்த்தவுள்ளார்.

(203)

* * *

யாழ்ப்பாணம்,ஜூன்22

தாவடி, கொக்குவிலில் உள்ள இராமகிருஷ்ண சமிதியில் நாளை சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு காசநோயாளர், கர்ப்பவதிகள், பாலூட்டும் தாய்மார் ஆகியோருக்கு போசாக்கு உணவு வழங்கப்படவுள்ளது.

கொழும்பு இராகிருஷ்ண மிஷனின் உதவியுடன் இது வழங்கப்படவுள்ளது.

சமிதி தலைவர் த.முருகானந்தா தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் யாழ்.அரச அதிபர் கே.கணேஷ் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். (203)

# வடமராட்சியில் வெங்காய உற்பத்தியாளர் சந்தைப்படுத்தல் வசதியின்றி பாதிப்பு

கரவெட்டி,ஜூன் 22

வடமராட்சிப் பிரதேச வெங்காய உற்பத்தியாளர்கள் தமது உற்பத்தியை சந்தைப்படுத்த வசதியின்றிப் பெரும் பாதிப்படைந்துள்ளனர். தனியார் நிறுவனங்களுக்கு ஊடாக தென்னிலங்கைக்கு வெங்காயத்தை ஏற்றுமதி செய்ததிலும் நஷ்டமடைந்துள்ளதாக உற்பத்தியாளர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

வடமராட்சியில் கடந்த போகத்தில் வெங்காயம் பெருமளவில் உற்பத்தி செய்யப்பட்டது. எனினும் அதனை சந்தைப்படுத்தும் வாய்ப்பு உற்பத்தியாளர்களுக்கு இல்லாது போயிற்று.

இதையடுத்து உற்பத்தியாளர்கள் தனியார் நிறுவனங்கள் ஊடாகக் கப்பல் மூலம் தென்னிலங்கைக்கு அனுப்பிவைத்தனர். எனினும் எதிர்பார்த்த இலாபத்தை அவர்களால் பெறமுடியவில்லை.

இதனால் தாம் பெரும் நஷ்டத்தை எதிர்கொண்டதாக விவசாயிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.

இந்த விடயத்தை யாழ். அரச அதிபர் கவனத்தில் எடுத்து வடமராட்சி விவசாயிகளின் உற்பத்திப் பொருள்களையும் தென்னிலங்கைக்கு அனுப்பிவைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுக்கின்றனர். (202-70)

# வாக்காளர் இடாப்புப் பதிவுகள் யாழ்.குடாநாட்டிலும் ஆரம்பம்


யாழ்ப்பாணம்,ஜூன் 22

வாக்காளர் இடாப்புப் பதிவு செய்யும் செயற்பாடுகள் யாழ். மாவட்டத்தின் சகல கிராம சேவையாளர் பிரிவுகளிலும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கடந்த ஆண்டைப்போன்று இம்முறை வீடுவீடாகச் சென்று பதியாமல் 18 வயதைப் பூர்த்தி செய்தவர்களை மட்டும் குடும்பத்தினருடன் சேர்த்துப் பதிவுசெய்யப்படவுள்ளதாகத் தேர்தல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கடந்த பல வருடங்களாக நாட்டின் நிலைமையைக் கருத்தில் கொண்டு 18 வயது பூர்த்தி அடைந்தவர்கள் மட்டும் சேர்க்கப்பட்டு வருகின்றபோதிலும் புதிய குடும்பங்களாகப் பிரித்து பதிவுகள் இடம்பெறவில்லை. இதே போன்று இடம்பெயர்ந்து வேறு இடங்களில், முகாம்களில் தங்கியுள்ளவர்களும் தமது பகுதி கிராம அலுவலர்களிடம் உரிய படிவத்தைப் பெற்று தமது பதிவுகளுடன் 18 வயதைப் பூர்த்திசெய்தவர்களின் பெயர்களையும் இணைத்துக்கொள்ள முடியும் எனவும் தெரி விக்கப்பட்டுள்ளது.

கிராம அலுவலர்களின் அலுவலகங்களுக்குச் சென்று 2006ஆம் ஆண்டுக்கான வாக்காளர் இடாப்புகளைப் பார்வையிட்டு பெயர்கள் சேர்க்கப்பட வேண்டியவர்களின் விவரங்களுடன் உரிய படிவங்களைப் பூர்த்தி செய்து பதிவுகளை மேற்கொள்ளும்படி அறிவுறுத்தப்பட்டுள்ளது. (202-68)




# சாவகச்சேரி நகரசபை எல்லைக்குள் சித்த ஆயுள்வேத மருந்தகம்

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதியில் சித்த ஆயுள்வேத மருந்தகம் ஒன்று அமைக்கப்படவுள்ளது.

இப்பகுதியில் சித்த ஆயுள்வேத மருந்தகம் ஒன்றை அமைக்குமாறு பிரதேச மக்கள் வேண்டுகோள் விடுத்திருந்தனர். இதையடுத்து, மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் சி.புண்ணியமூர்த்தி சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதியில் சித்த ஆயுள்வேத மருந்தகம் அமைக்க அனுமதி வழங்குமாறு மாகாண சுதேச மருத்துவ திணைக்களப் பணிப்பாளரைக் கேட்டுள்ளார். இதற்கான அனுமதி கிடைத்ததும் மருந்தகம் விரைவில் அமைக்கப்படவுள்ளது. (202-207)



**இலங்கை வங்கியில் சிறுவர் சேமிப்புக் கணக்குகள் வைத்திருப்போருக்கான இலவச காப்புறுதித் திட்டத்தின் கீழ் நெல்லியடிக் கிளை வாடிக்கையாளர்களான தந்தையை இழந்த திரவியநாதன் அயிதா, திரவியநாதன் பாமிலா ஆகியோருக்கு தலா 5 லட்சம் ரூபா வழங்கப்பட்டது.**

**இழப்பீட்டுத் தொகைக்கான காசோலைகளை கிளை முகாமையாளர் வி.தில்லைநாதன், உதவி முகாமையாளர் சோ.கணேஸ் ஆகியோர் வழங்குவதைப் படத்தில் காணலாம். படத்தில் கிளையின் சந்தைப்படுத்தல் அதிகாரி எஸ்.சிறிகாந்தனும் காணப்படுகின்றார்.**

# தொடர்ந்து ஏற்படும் மின் தடையால் பாடசாலை நேரத்தில் மாணவர் சிரமம்

## குடிதண்ணீரைப் பெறுவதற்கும் அலைகின்றனர்

யாழ்ப்பாணம்,ஜூன் 22

சில நாள்களுக்குத் தொடர்ந்து மின்தடை ஏற்படுத்தப்படுவதால் பாடசாலை நேரத்திலும் மாணவர்கள் பெரும் நெருக்கடிகளுக்கு உள்ளாக நேர்ந்துள்ளது.

இவ்வாறான செயற்பாடு காரணமாகப் பாடசாலை மாணவர்கள் குடிதண்ணீரைப் பெறுவதற்கு வெளியிடங்களுக்கு அலைய வேண்டிய நிலையை எதிர்கொண்டுள்ளனர்.

மின்தடையினால் மின்சாரம் இன்றிப் பாடசாலைகளில் உள்ள நீர் இறைக்கும் இயந்திரங்கள் இயங்க முடியாது போகின்றன.

இதனால் மாணவர்கள் குடிதண்ணீரைப் பெறுவதற்கு வெளியிடங்களுக்குச் செல்ல வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

இவ்வாறான சம்பவம் மட்டுவில் பகுதியில் கடந்த வாரம் இடம்பெற்றுள்ளது.

இதனால் இரண்டு பாடசாலைகளின் மாணவர்கள் குடிதண்ணீரைப் பெறுவதற்கு வெளியிடங்களுக்குச் செல்லவேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

இதேவேளை-

இப்பாடசாலைகளில் குடிதண்ணீரைப் பெற்று வந்த பொதுமக்களும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

(203-207)

# புலோலியில் கணவன், மனைவி இருவரையும் கத்தியால் குத்திவிட்டு தாலி அபகரிப்பு

உடுப்பிட்டி,ஜூன் 22

கணவனையும் மனைவியையும் கத்தியால் குத்திக் காயப்படுத்திவிட்டு பெண்ணின் தாலிக்கொடியைக் கொள்ளையர்கள் அபகரித்துச் சென்றுள்ளனர். காயமடைந்த இருவரும் ஆபத்தான நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு 9.30 மணியளவில் பருத்தித்துறை, புலோலி மத்தி வெள்ளைப்பிள்ளையார் ஆலயத்திற்கு முன்பாக உள்ள வீடொன்றில் இடம்பெற்றுள்ளது.

முருகன் தங்கராசா(வயது 50) த.புவனேஸ்வரி(வயது 47) ஆகிய இருவருமே காயங்களுடன் ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

மின் தடைப்பட்டிருந்த நேரத்தில் குறிப்பிட்ட பெண்மணி வெளிக்கதவை பூட்டிக் கொண்டிருந்த வேளையில் இருட்டில் மறைந்திருந்த திருடர்கள் பெண்ணின் தாலியை பறித்துள்ளனர். அவர் அவலக் குரல் எழுப்பியதை அடுத்து கணவர் அவ்விடத்திற்கு வந்துள்ளார். இதையடுத்து திருடர்கள் இருவருக்கும் கத்தியால் குத்திவிட்டுத் தப்பிச் சென்றதாக விசாரணைகளில் கூறப்பட்டது. அயலவரின் உதவியுடன் இருவரும் வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டனர். (202-155)

## போஷாக்கற்ற குழந்தைகளுக்கு புரதச் சத்து பிஸ்கட்

வலி.தென் மேற்கு,ஜூன் 22

மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட போசாக்குக் குறைந்த குழந்தைகளுக்கென யுனிசெப் நிறுவனம் புரதச் சத்து பிஸ்கட்டுகளை வழங்கியுள்ளது.

இவை அப்பிரிவின் வைத்தியசாலைகளில் நடைபெறும் சிறுவர்- குழந்தைகளுக்கான கிளினிக்குகளில் வைத்து வழங்கப்பட்டு வருகின்றன.

இதனைப் பெற்று தமது குழந்தைகளுக்குக் கொடுப்பதில் பெற்றோர் ஆர்வம் காட்ட வேண்டும் எனக் கேட்கப்பட்டுள்ளது.(135)

## வழிகாட்டல் வகுப்பு

யாழ்ப்பாணம் ஜூன் 22

இந்து கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் நடத்தப்படும் இந்து தர்மாசிரியர் பரீட்சைக்கான வாழிகாட்டல் வகுப்புக்கள் சிவலிங்க யோகக் கேந்திர நிலையத்தால் நடத்தப்படவுள்ளது.

இந்து தர்மாசிரியர் பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகள் எதிர்வரும் முத லாம் திகதிக்கு முன்னர் இணுவில் இளந்தொண்டர் சபையில் தமது பதிவுகளை மேற் கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (202-79)

## நீர்வேலி தெற்கு வீதி சேதம்

அரியாலை ஜூன் 22

நீர்வேலி தெற்கு இந்து தமிழ்க் கலவன் பாடசாலைக்கு செல்லும் வீதி மிகவும் சேதமடைந்து குன்றும் குழியுமாகக் காணப்படுகிறது.

கடந்த ஆறு ஆண்டுகளுக்கு முன்னர் புனரமைக்கப்பட்ட இந்த வீதி தற்போது சேதமடைந்துள்ளது.

இந்த வீதியால் பாடசாலைக்குச் செல்லும் மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

இவ்வீதியை புனரமைப்பதற்கு வலி கிழக்கு பிரதேசசபை உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (202-17)

## வலி.வடக்கில் தடகளப் போட்டிகள்

யாழ்ப்பாணம்,ஜூன் 22

வலி.வடக்கு தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையேயான தடகள விளையாட்டுப் போட்டிகள் நாளை சனிக்கிழமையும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமையும் நடைபெறவுள்ளன.

அளவெட்டி அருணோதயக் கல்லூரி மைதானத்தில் பிரதேச செயலாளர் பி.முரளீதரன் தலைமையில் இப்போட்டிகள் இடம் பெறவுள்ளன. (202-86)

## விளையாட்டு விழாக்கள்

யாழ்ப்பாணம்,ஜூன் 22

நவக்கிரி எல்லாளன் வாணி முன்பள்ளியின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு முன்பள்ளி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

க.சயந்தன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் யாழ்.மாவட்ட சனசமூக நிலைய அபிவிருத்தி உத்தியோகத்தர் மலர்மகள் தயாபரன் முதன்மை விருந்தினராகவும் சமூக அபிவிருத்தி மன்றத் தலைவி திருமதி நவநீதம் ஜெகதீசன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வர். (203)

* * *

யாழ்ப்பாணம்,ஜூன் 22

யாழ்.பாலர் பாடசாலையின் விளையாட்டு விழா நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு வள்ளுவன் சனசமூக விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

பாடசாலைப் பொறுப்பாசிரியர் திருமதி சத்தியதேவன் வளர்மதி தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் திருமதி நவநீதம் ஜெகதீசன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். (203)

* * *

யாழ்ப்பாணம்,ஜூன் 22

புத்தூர், வளர்மதி கல்விக்கழகம் நடத்தும் வளர்மதி முன்பள்ளியின் விளையாட்டு விழா நாளை சனிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு வளர்மதி முன்பள்ளி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

வளர்மதி கல்விக்கழகத் தலைவர் து.ரமேஷ் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக யாழ்.பல்கலைக்கழக உடற்கல்வி அலகு பதில் பணிப்பாளர் கே.கணேசநாதன், யாழ்.தேசியக்கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர் திருமதி ஞா.கணேசநாதன் ஆகியோர் கலந்து கொள்வர். (203)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடல், உள ரீதியாகப் பாதிக்கப்படுகிறோம் உறவுகளே எமக்காகக் குரல் கொடுங்கள்

## நவ்று தீவில் உள்ள அகதிகள் உருக்கமான வேண்டுகோள்

நவ்று,ஜூன்22

உடல், உள ரீதியாக நாம் கடுமையாகப் பாதிக்கப் பட்டுள்ளோம். எமது எதிர்காலம் எவ்வாறு அமையப் போகிறது என்று தெரியாமல் ஏங்கிக்கொண்டிருக்கி றோம். எமது உறவுகளே எமக்காக உரத்துக் குரல் கொடுங்கள்.

இவ்வாறு உருக்கமான வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளார்கள் 'நவ்று' தீவில் தங்க வைக்கப்பட்டி ருக்கும் இலங்கைத் தமிழ் அகதிகள்.

ஐக்கிய நாடுகள் சபையால் அனைத் துலக அகதி கள் நாள் கடைப்பிடிக்கப்படும் வேளையில் நவ்று தீவில் உள்ள இலங்கை அகதிகள் தடுப்பு முகாமில் இருந்து 'தமிழீழ உறவுகளுக்கு விடுக்கும் உருக்க மான வேண்டுகோள்' என்ற தலைப்பில் அவர்கள் வெளி யிட்டுள்ள அறிக்கையின் விவரம் வருமாறு:-

நீங்கள் எங்களுக்கான உதவிகளை செய்துகொண்டி ருக்கிறீர்கள் என்பதனை நாம் அறிவோம். அதற்காக முதலில் உங்களுக்கு எங்களது மனப்பூர்வமான நன்றி களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

மேலும் உங்களுக்கு எழுதிக்கொள்வது யாதெ னில், எமது நாட்டில் இருந்து போர்ச் சூழல் காரணமாக சொல்லில் அடங்காத வேதனைகளை அனுபவித்து உயிரைப் பாதுகாத்துக் கொள்ளவென ஆழ்கடல் ஊடா கப் பயணம் செய்து மூன்று மாதங்களாக நவ்று இலங்கை அகதிகள் தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப் பட்டுள்ளோம்.

இந்நிலையில் அடுத்து என்ன நடக்கப் போகி றதோ- எங்களின் எதிர்காலம் எவ்வாறு அமையப் போகிறதோ என்று தெரியாமல் ஏங்கித் தவித்துக்கொண் டிருக்கிறோம். தொடர்ந்தும் இந்த நாட்டில் அசாதாரண சூழ்நிலையில் இருந்து கொண்டிருப்பதால் உடல் ரீதி யாகவும் உள ரீதியாகவும் பாதிக்கப்பட்டுக்கொண்டிருக்கி றோம். எமது குடும்ப உறவுகளுடன் நீண்டகாலமாக எந்த விதத் தொடர்புகளும் இல்லாமல் தவித்த நிலையில் இருக்கிறோம்.

எனவே இந்த அனைத்துலக அகதிகள் நாளில் எங் களுக்காக உங்களது உரிமைக் குரல்களை உரத்துத் தெரி விப்பதுடன் எங்களை அகதிகளாக ஏற்றுக்கொண்டு எங் களுக்கு மறுவாழ்க்கையை அமைத்துக் கொள்வதற்கு உரி யவர்களுடன் கதைத்து அழுத்தங்களைக் கொடுக்குமாறு உறவுகள் என்ற உரிமையில் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றோம் - என்றுள்ளது.

இதேவேளை -

ஆஸ்திரேலியாவின் கட்டுப்பாட்டில் உள்ள நவ்று தீவில் தடுத்துவைக்கப்பட்டுள்ள புகலிடம் கோரும் தமிழ் பேசும் இலங்கையர்களும் மியான்மர் நாட்டைச் சேர்ந்த 7 பேரும் அனைத்துலக அகதிகள் நாளை கடைபிடித்து வருகின்றனர்.

இலங்கைக் கொடூரங்களை அனைத்துலகம் கண்டித்து வரும் நிலையில் ஆஸ்திரேலிய அரசாங்கத்திடம் புகலி டம் கோரியுள்ள தங்களுக்கு எதுவித முடிவும் தெரிவிக் கப்படாதது ஏமாற்றமளிப்பதாக அவர்கள் தெரிவித்துள் ளனர்.

"எங்களது மன விரக்தியை அனைத்துலக அகதிகள் நாளில் அமைதியாக வெளிப்படுத்தி வருகிறோம்" என் றும் அவர்கள் கூறியுள்ளனர். (50)


# முதலாம் ஆண்டு நினைவு நாள்



ஊரிக்காட்டைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட

**தேவராசா பிரதீபன்**

(PETER)

மலர்வு: 1984.11.30

உதிர்வு: 2006.07.03

*ஆண்டொன்று சென்றது*
*ஆறவில்லை எம் துயரம்*
*ஆண்டு ஒன்றென்ன? பல சென்றாலும்*
*உன் இனிய முகம் எம் கண் முன் நிற்கிறது!*
*உன் பிரிவு எம் மனதை விட்டகலாது.*

சோடா கொம்பனி ஒழுங்கை,
ஊரிக்காடு, வல்வெட்டித்துறை.

**சுந்தரம் குடும்பம்.**

(61994)



# கண்ணீர் அஞ்சலி

**அம்பலவாணர் சர்வானந்தராசா**

(பொருளாளர், காரைநகர் வடக்கு, மருதடி, அருள்மிகு வீரகத்தி விநாயகர் தேவஸ்தானம்)

*எங்கள் பொருளாளர் அன்புக்குரிய அம்பலவாணர் சர்வானந்த ராசா இறைபதம் அடைந்த செய்தி கேட்டு ஆறாத்துயர் அடை கின்றோம். அவரது பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல மருதடி வீரகத்தி விநாயகப் பெரு மானைப் பிரார்த்திக்கின்றோம்.*

மருதடி,
காரைநகர்.
(61852)

**பொறுப்புரிமையாளர் சபை.**
மருதடி அருள்மிகு வீரகத்தி விநாயகர் தேவஸ்தானம்,
காரைநகர்.



# 9ஆம் ஆண்டு நினைவினில்...

மலர்வு 12 ★ 03 ★ 1925



உதிர்வு 01 ★ 07 ★ 1998

**திருமதி நல்லதம்பி புனிதவதி**

திதி: அட்டமி

*அம்மா என்று இல்லையென்றால்*
*இம்மா நிலத்தில் நாங்களில்லை*
*உங்கள் நினைவோடு வாழுகின்றோம்*
*நீங்கள் எங்கள் தெய்வமம்மா!*

மானிப்பாய் வீதி,
உரும்பிராய் மேற்கு,
உரும்பிராய். (61995)

**குடும்பத்தினர்.**


## தென்மராட்சி வலய மாணவருக்கு வினாடி வினாப் போட்டிகள்

யாழ்ப்பாணம்,ஜூன்22

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலை களில் தரம் 6 தொடக்கம் தரம் 11 வரை கற்கும் மாணவர்களுக்கிடையிலான விஞ் ஞான, கணித பாட வினாடி வினாப் போட்டி கள் நடத்தப்படவுள்ளன.

எதிர்வரும் 30ஆம் திகதி சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் போட்டிகள் நடத்தப்பட வுள்ளன.

வகுப்பு ரீதியாக நடத்தப்படும் போட்டி களுக்கு தலா பத்து மாணவர்கள் வீதம் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

(203-207)

## நல்லூர் கோட்டத்தில் புலமைப்பரிசில் பரீட்சை

யாழ்ப்பாணம்,ஜூன்22

நல்லூர் கல்விக் கோட்டத்திற்குட்பட்ட பாடசாலைகளின் தரம் 5 மாணவர்களுக் கான மாதிரிப் புலமைப்பரிசில் பரீட்சை III இன்று வெள்ளிக்கிழமை நடைபெறவுள் ளது.

பாடசாலை அதிபர்கள் இன்று முற்பகல் 10 மணிக்கு கோட்டக் கல்விப் பணி மனைக்கு வருகைதந்து வினாத்தாள்களை எடுத்துச் செல்ல இயலும் என்று கோட்டக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (203)

## நீர்த்தாங்கி அன்பளிப்பு

வடமராட்சி,ஜூன்22

தம்பசிட்டி சதாவதானி கதிரைவேற்பிள்ளை சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கத் திற்கு பருத்தித்துறை நகரசபை ஆயிரம் லீற் றர் கொள்ளளவு கொண்ட நீர்த்தாங்கி ஒன்றை வழங்கியுள்ளது.

இந்த நீர்த்தாங்கியில் இருந்து பொது மக்களதும் சங்கத்தினதும் குடிதண்ணீர் தேவை பூர்த்தி செய்யப்பட்டு வருகிறது (203-160)

## கணித அறிவாற்றல் பயிற்சி

யாழ்ப்பாணம்,ஜூன்22

தென்மராட்சி பிரதேச முன்பள்ளிகளில் கற்கும் மாணவர்களின் பொற்றோர்களுக்கு அவர்களின் குழந்தைகளுக்கான கணித அறிவாற்றல்விருத்தி தொடர்பான பயிற்சிப் பட்டறைகள் நடத்தப்படவுள்ளன.

தென்மராட்சி கல்வி வலய அலுவல கத்தினால் முன்பள்ளிகள் தோறும் பயிற்சிப் பட்டறைகளை நடத்துவதற்கு திட்டமிடப் பட்டுள்ளது.

முன்பள்ளிச் சிறார்களின் கல்வி வளர்ச்சி யில் பெற்றோர்களின் பங்களிப்பை எந்த வகையில் வழங்கலாம் என்பதை இப்பயிற்சிப் பட்டறைகள் மூலம் தெரிவிப்பதற்கே இத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

கடந்த வாரம் கல்வயல் டேனுஜா முன் பள்ளியில இந்த பயிற்சிப் பட்டறை நடத்தப்பட்டது.பயிற்சி நிறைவில் கருத்துத் தெரிவித்த பெற்றோர் மொழி அறிவாற்றல் பயிற்சிப் பட்டறை நடத்துமாறும் அதற் குரிய செலவினை தாமே பொறுப்பேற்ப தாகவும் தெரிவிக்கப்பட்டது. (207)

## பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் பணியாளர்களுக்கு சம்பளம் அதிகரிப்பு

அரியாலை ஜூன்22

குடாநாட்டில் உள்ள பலநோக்குக் கூட் டுறவுச் சங்கங்கள் சில பணியாளர்களுக்கான புதிய சம்பளத் திட்டங்களை நடை முறைப் படுத்தி வருகின்றன.

இந்த புதிய சம்பளத்திட்டத்தினால் கூட்டுறவுப் பணியாளர்கள் ஓரளவு நன்மை அடைந்துள்ளனர்.

வாழ்க்கைச் செலவு அதிகரிப்பினாலும் தற்போது நிலவும் அசா தாரண சூழ்நிலையாலும் குடாநாட்டில் உள்ள கூட்டுறவுப் பணியா ளர்களும் பெரும்பாதிப்பு அடைந்துள்ளனர்.

இந்த புதிய சம்பள திட்டத்தை சில பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் நடை முறைப்படுத்தி வருவதால் பணியாளர்கள் நன்மை யடைகின்றனர்.

ஏனைய சங்கங்களும் இந்த சம்பளத் திட்டத்தை நடைமுறைப் படுத்துவதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டு வருவதாகத் தெரி விக்கப்பட்டது. அதனை விரைந்து முன்னெடுக்க வேண்டும் என பணியாளர்கள் கோரிக்கை விடுகின்றனர். (202-17)


# நோயாளர் படகு (Ambulance Boat) (அமைய)

## சாதாரண தொழிலாளி பதவிக்கான விண்ணப்பம் கோரல்

எமது பிராந்தியத்திலுள்ள நோயாளர் படகில் அமைய அடிப்படையில் சாதாரண தொழிலாளியாக கடமையாற்று வதற்கு பின்வரும் தகுதியுடையவர்களிடமிருந்து விண்ணப் பங்கள் கோரப்படுகின்றன.

1. க.பொ.த. (சா/த) சித்தி
2. வயது 30.06.2007 இல் 18 முதல் 40 ஆண்டு
3. ("Coxwain") "கொக்ஸ் வைன்" தராதரப்பத்திரம்
4. மேற்படி தராதரப்பத்திரத்துடன் 2 வருட படகு ஓட்டும் அனுபவம்

தாங்களாகவே மேற்படி விவரங்கள் அடங்கிய விண்ணப் பத்தினைத் தயாரித்து 30.06.2007 அல்லது அதற்கு முன் கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபாலில் *"பிரதி மாகாணப் பணிப்பாளர் சுகாதார சேவைகள் பணிமனை", ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்* என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண் டும். சம்பள விவரம் பின்னர் அறியத்தரப்படும்.

(சி/52732)

**பிரதி மாகாணப் பணிப்பாளர்,**
*சுகாதார சேவைகள், யாழ்ப்பாணம்.*



# கண்ணீர் அஞ்சலி



**மயில்வாகனம் அருளானந்தம்**

(முன்னாள் போசகர், ஈச்சமோட்டை, கலட்டிப்புலம் ஸ்ரீ ஞானவைரவர் தேவஸ்தானம்)

*எமது ஆலய முன்னாள் போசகர் மயில்வாகனம் அருளானந்தம் அவர்களின் மறைவையொட்டி துய ருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது நிர்வாக சபை யினரின் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.*

ஈச்சமோட்டை,
(61998) கலட்டிப்புலம் ஞான வைரவர் ஆலய நிர்வாக சபையினர்.



# மரண அறிவித்தல்கள்

## குலசிங்கம் மகாலட்சுமி



சோமசுந்தரம் வீதி, ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட குலசிங்கம் மகாலட்சுமி 19.06.2007 செவ் வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்துரை - மீனாட்சி தம்பதியரின் மகளும் குலசிங்கத்தின் அன்பு மனைவியும் சரஸ்வதி, சற்குணம், மனோன்மணி, பரமேஸ் வரி, ஜெகதீஸ்வரி, பாஸ்கரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் சாந்தகுமார் (பொறியியலாளர், U.K.), தவராஜன், கோபாலசிங்கம், தாரணி (இராமநாதன் நுண்கலைப்பீடம், யாழ்.பல்கலைக்கழகம்), நிமலராஜ் ஆகியோரின் அன்புத் தாயும் குமுதினி (U.K.), மேரி யூடிற்ரா ஆகியோரின் மாமியும் மாதேஸ் (U.K.), சஞ்சுதன் ஆகி யோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.06.2007) வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரின் இல்லத் தில் நடைபெற்று, பூதவுடல் கல்லுண்டாய் இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சோமசுந்தரம் வீதி,*
*ஆனைக்கோட்டை.*
T.P.: 077 6333331 (61933)

*தகவல்:*
குடும்பத்தினர்.

## சின்னத்தம்பி கணபதிப்பிள்ளை

அச்சுவேலி, மடத்தடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமா கவும் கொண்ட சின்னத்தம்பி கணபதிப்பிள்ளை நேற்று (21.06.2007) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி - சின்னம்மா தம்பதி யரின் அன்பு மகனும் ஜெயமலரின் அன்புக் கணவரும் செல்லத் துரை, செல்லம்மா, இராசதுரை, இராசம்மா ஆகியோரின் சகோதர னும் பகீரதன் (ஜேர்மனி), சியாமினி, காமினி, தாரணி ஆகியோ ரின் அன்புத் தந்தையும் தவமூர்த்தி, மல்லிகா (ஜேர்மனி), சுகந்தி (பிரான்ஸ்), இராசமலர் (பிரான்ஸ்), சுமதி, மஞ்சு, ஜெயராசா (பிரான்ஸ்), இராசமலர் (ஜேர்மனி), தமேஸ் (சவூதி) ஆகியோ ரின் மாமனும் அபர்ணா, நிருபன், கௌசிகா, சர்மிலா, அபிசா, அபிசாத் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.06.2007) வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக வல்லை மயா னத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இராஜ வீதி,*
*அச்சுவேலி.* (61997)

*தகவல்:*
மனைவி (மலர்), பிள்ளைகள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனைத்துலக ரீதியில் இலங்கைத் தமிழர்களே அதிக தடவைகள் அகதிகளாகியுள்ளனர்

## விடுதலைப் புலிகள் பேச்சாளர் செல்வி தெரிவிப்பு

கிளிநொச்சி,ஜூன்22

அனைத்துலக ரீதியில் இலங்கைத் தமிழ் மக்கள்தான் அதிக தடவைகள் இடம்பெயர்ந்து அகதிகளாகிப் பாதிப்புக்குள்ளாகி யுள்ளனர்.

இவ்வாறு குறிப்பிட்டுள்ளார் விடுதலைப் புலிகளின் மனித உரிமைகளுக்கான பேச்சாளர் நவரூபன் செல்வி.

ஐக்கிய நாடுகள் சபையினால் உலக அகதிகள் நாள் நேற்றுமுன்தினம் புதன்கிழமை கடைப்பிடிக்கப்பட்டது. அகதிகள் நாளையொட்டி தமிழர்களின் அகதி வாழ்க்கை குறித்த அறிக்கை ஒன்றை தமிழீழ விடுதலைப் புலிகளின் மனித உரிமைகள் மற்றும் மனிதாபிமான விவகாரங்களுக்கான பேச்சாளர் நவரூபன் செல்வி வெளியிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:-

தமிழர் தாயகத்திலிருந்து ஏப்ரல் 2006 முதல் 2007 ஆம் ஆண்டு வரை 3 லட்சம் பேர் இடம் பெயர்ந்துள்ளனர் என்று ஐக்கிய நாடுகள் சபையின் உயர் ஆணையகம் தெரிவித்துள்ளது. யுத்த நிறுத்த ஒப்பந்தம் அமுலில் உள்ள நிலையில் ஒரு மிகக் குறிப்பிட்ட காலத்திலேயே மிகப் பெரும் தொகையான தமிழ்மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர்.

தமிழர் தாயகத்தில் கடந்த 30 ஆண்டுகளில் அனைத்துத் தமிழர்களுமே ஒருமுறையேனும் இடப்பெயர்வுக்குள்ளாகி இருக்கின்றனர்.

1983 ஆம் ஆண்டு தமிழர்களுக்கு எதிரான வன்முறைகளால் கொழும்பிலிருந்தும் தமிழர் தாயகத்திலிருந்தும் பெருந்தொகையான தமிழர்கள் வெளிநாடுகளுக்கு இடம் பெயர்ந்தனர்.

1980 ஆம் ஆண்டுகளிலிருந்து பலாலி வானூர்தி நிலையத்தைச் சுற்றிய பகுதிகளில் வசித்த ஆயிரக்கணக்கான மக்கள் இடம் பெயர்ந்தனர். அதேபோல் அதே காலகட்டத்தில் ஊர்காவற்றுறை பிரதேச மக்களும் இடம்பெயர்ந்தனர். தமிழ் மக்கள் தங்கள் நிலங்களிலிருந்து பலவந்தமாக வெளியேற்றப்பட்ட பலாலி மற்றும் ஊர்காவற்றுறை பிரதேசங்களில் வலுவான இராணுவத் தளங்கள் தற்போது அமைக்கப்பட்டுள்ளன.

வடக்கில் கொக்கிளாய் தொடக்கம் அம்பாறை வரையில் இதே நிலைமைதான் நீடிக்கிறது.

இப்பிரதேசங்கள் அதி உயர் பாதுகாப்பு வலயங்களாகப் பிரகடனப்படுத்தப்பட்டு பிற மாவட்டங்களிலிருந்து சிங்கள மக்கள் அங்கு குடியேற்றப்பட்டு வருகின்றனர். 2006 ஆம் ஆண்டு இராணுவ நடவடிக்கைகளால் மூதூர் கிழக்கு மற்றும் திருகோணமலையிலிருந்து தமிழ் மக்கள் வெளியேறினர். அப்பகுதியிலிருந்து பெருந்தொகையான மக்கள் இடம்பெயர்ந்தனர். தற்போது அந்தப் பகுதிகள் அதி உயர் பாதுகாப்பு வலயங்களாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன. இதனால் யுத்த நிறுத்த ஒப்பந்த காலத்துக்கு இருந்தது போல் 3 லட்சம் மக்கள் மீண்டும் அகதிகளாக்கப்பட்டுள்ளனர்.

சிறிலங்கா அரசாங்கத்தின் இராணுவத் தாக்குதல்களாலும் பெருந்தொகையான தமிழ் மக்கள் அகதிகளாக்கப்பட்டனர். 1995 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தை சிறிலங்கா இராணுவம் ஆக்கிரமித்த போது 4 இலட்சம் தமிழர்கள் அகதிகளாக்கப்பட்டனர். யாழ்ப்பாணத்திலிருந்து வெளியேறி வெளிநாடுகளிலும் வன்னிப் பிரதேசத்திலும் வசித்தோரில் அரைவாசிப் பேர் திரும்பிவிட்டனர்.

இலங்கையிலிருந்து 5 இலட்சம் தமிழர்கள் தங்கள் வாழ்க்கையைக் காப்பாற்றிக் கொள்ளவும் கல்வி கற்கவும் வெளிநாடுகளுக்குத் தப்பியுள்ளனர். தமிழர் தாயகத்தின் ஒட்டுமொத்த மக்கள் தொகை 2 மில்லியன். 75 வீதத்தினர் இடம்பெயர்ந்துள்ளனர்.

தங்கள் தாயகத்திலிருந்து பலவந்தமாக தமிழ் மக்கள் வெளியேற்றப்படுவது என்பது அனைத்துலக மனித உரிமை விதிகளுக்கு எதிரானது. அது ஒரு மனித உரிமை மீறல். அனைத்துலக அளவில் தமிழ் மக்கள்தான் மிகவும் அதிக எண்ணிக்கையில் இடம் பெயர்ந்து பாதிப்புக்குள்ளாகியுள்ளனர். சிறிலங்கா அரசாங்கத்தின் இக்கொடூர நடவடிக்கைகள் குறித்து அனைத்துலக சமூகம் விழித்துக்கொள்ளவேண்டும் - என்று உள்ளது.

(50)

## குடாநாட்டு சந்தைகளில் மரக்கறிகளின் விலை அதிகரிப்பு

அரியாலை,ஜூன்22

குடாநாட்டு சந்தைகளில் மரக்கறி வகைகளின் விலைகள் மீண்டும் அதிகரித்துள்ளன.

திருநெல்வேலி, சுன்னாகம், மருதனார்மடம் போன்ற சந்தைகளில் மரக்கறிகளின் விலைகள் அதிகரித்துள்ளன.

பயற்றங்காய் கிலோ 120 ரூபாவாகவும், கத்தரிக்காய் கிலோ 50 ரூபாவாகவும், பாவற்காய் கிலோ 120 ரூபாவாகவும், வெண்டிக்காய் கிலோ 80 ரூபாவாகவும், முருங்கைக்காய் கிலோ 200 ரூபாவாகவும் விற்கப்படுகின்றன. (202-17)

## வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி ஏற்ற அறிவுறுத்து

கரவெட்டி,ஜூன்22

வடமராட்சி சுகாதாரப் பிரிவிலுள்ளவர்கள் தமது வளர்ப்பு நாய்களுக்குத் தடுப்பூசி ஏற்றும் விடயம் தொடர்பாக அதிக அக்கறை எடுக்கவேண்டுமென சுகாதாரப் பிரிவு அதிகாரி என்.இரவீந்திரதாஸ் பொதுமக்களுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

பிரதேசத்திலுள்ள வளர்ப்பு நாய்களுக்குத் தற்போது தடுப்பூசிகள் ஏற்றப்படுகின்றன. மக்கள் இதற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என அவர் கேட்டுள்ளார். (202-70)

# யாழ்.பல்கலைக்கழக கலைப்பீடத்துக்கு விசேட பாட அனுமதியில் தெரிவானோர்

யாழ்ப்பாணம்,ஜூன்22

யாழ். பல்கலைக்கழக கலைப்பீடத்தில் கல்வியாண்டு 2006/2007 விசேட பாடங்களில் 'கற்பதற்கு மேலதிகமாக 138 மாணவர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

குறிப்பிட்ட மாணவர்களை உடன் யாழ். பல்கலைக்கழக பரீட்சைகளும் கிளையில் பதிவுகளை மேற்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

மேலதிக விவரங்களை 2226714 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு அறியுமாறு கேட்கப்பட்டுள்ளது.

தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களின் விவரம் வருமாறு:-

ரி.மதீஸ்வரன், எ.யூலிதா, கே.வேலாயுதம், ஜே.நிவேதிகா, ஜி.கோபிதாஸ், ஜி.கோபிகா, எ.மயூரன், எ.செபராஜா, பி.அமிர்தினி, எஸ்.செல்வமனோகரி.

ரி.விஜிதா, எஸ்.அனுசியா, பி.அருமைத்துரை, ரி.கோவிந்தசாமி, ரி.நவராஜா, எஸ்.தர்சிகா, எம்.ராசேந்திரலிங்கம், என்.முத்துக்கிருஷ்ணன், திருச்சிற்றம்பலம், எல்.கோகுலவாணி.

ரி.ரஜீபா, கே.கலாரஞ்சினி, வை.காயத்திரி, ஜே.கஜேந்தினி, எஸ்.சிவரஞ்சினி, வி.கேதீஸ்வரன், பி.பத்மநிரூபா, ஆர்.மைதிலி, கே.தேனுகா, என்.சங்கீதா.

எஸ்.பிரதீபன், வி.நவநீதன், கே.சதாசிவம், எஸ். பரமேஸ்வரன், வை.பிரதீப், ரி.கஜேந்திரன், என்.விக்னேஸ்வரன், ரி.நதியா, ஜே.சதாசிவம், எம்.ஜெனார்த்தனி.

இ.கார்த்திகா, எஸ்.சுகிர்தா, ஜே.அலோசியஸ், ரி.மிதிலா, எ.லூட்ஸ் சஜிதா, கே.கீதாஞ்சலி, எம்.சுஜீவா, என்.துஷ்யந்தன், பி.கஜலக்ஷ்மி, ஏ.திவ்யராசா.

என்.கல்பனா, ஆர்.நடராஜா, பி.வர்ஜினி, எம்.செந்தில்குமரன், ரி.திருநீலநாயகி, ஆர்.நீகன், என்.பிருந்தினி, எஸ்.லதாசாந்தி, எஸ்.சிவாஜினி, எஸ்.ஜெய்கணேஷ்

எஸ்.அனுஷா, என்.செல்வநாதம், எம்.சிவஞானம், ரி.கிரிஜா, எம்.எம்.மேரி பிரதீபா, எம்.தர்மலிங்கம், பி.ஆறுமுகம், என்.பாமினி, பி.ரேகா, கே.ஜீவிதா,

ஜி.உதயரூபினி, எஸ்.எம்.றொசானி, கே.இந்திரன், ஏ.ஸ்ரெலா, ஏ.ஏ. உரிசுலா, ஜே.காயத்திரி, ஆர்.அஜித், பி.ஏ.ஏ.டலிமா, ஜே.எவ்.எம்.றொக்சி, ஆர்.நிரோஜன்.

எஸ்.எம்.சி.துரம், என்.லோஜனா, எஸ்.எட்னா, பி.விஜிதா, ஆர்.பாலு, கே.இளவரசன், எ.ரஜோசனா, எம்.றொசாயினி, எஸ்.சுப்பிரமணியம்.

கே.சதாசிவம், கே.அமலராணி, எஸ்.புஸ்பவதனா, பி.ரவீந்தினி, எ.எஸ்.பி.சைலேந்தினி, ஏ.சிவபாலசுந்தரம், கே.கமலரூபினி, எஸ்.டி.சிபா, ரி.எஸ்.தர்சிகா, ஜே.ரி.மரிஸ்ரெலா.

கே.றெஜினோல்ட், என்.நிரோஜன், கே.கபிலன், சி.கமலினி, எஸ்.கிருபாகரன், கே.மகேந்திரன், ரி.ராசன், எம்.சசிகலா, ரி.புவனேந்திரராசா.

சி.ஏ.டெனிசியஸ், பி.பி.புஸ்பநாதன், ரி.ஸ்ரீவர்ணன், வி.பரமசாமி, என்.நிஷாந்தினி, எஸ்.ஜெனிதா, கே.கலைவாணி, ரி.சிந்துஜா, எஸ்.கிருபாலினி, எஸ்.பாரதி.

வி.அருள்குமார், பி.சஞ்ஜீதா, எஸ்.தவபாலசிங்கம், ரி.சிவரஞ்சினி, எம்.சுபரஞ்சினி, எஸ்.வேகாந்தான், ரி.செல்வநாதன், கே.கலைவதனி, எஸ்.வதனி, ஜே.ஜெயகமிலா, ஏம்.சுகந்தினி, கே.சர்மிலா, ஆர்.கீதா, கே.தர்சனா, ஏ.றஜிதா, எஸ்.விஜயரூபன், வி.வசீகரன், பி.கிருபாலினி, கே.பிரதா.

## கொழும்புத்துறை விநாயகர் ஆலயத்துக்கு சித்திரத் தேர்

அரியாலை,ஜூன்22

கொழும்புத்துறை மேற்கு விநாயகர் ஆலயத்திற்கு சித்திரத்தேர் அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளது என ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்தனர்.

சுமார் 50 இட்சம் ரூபா செலவில் இந்த புதிய சித்திரத்தேர் அமைக்கப்படவுள்ளது. (202-17)

## சமய சந்நிதிகளில்

வண்ணை வடமேற்கு, நொச்சியம்பதி பத்திரகாளி அம்பாள் ஆலய சங்காபிஷேகம் இன்று வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு இடம்பெறவுள்ளது.

தொடர்ந்து நண்பகல் 12 மணிக்கு விசேட பூசையும் அன்னதானமும் இடம் பெறும்.

மாலை 4 மணிக்கு வசந்த மண்டபப் பூசையும் தொடர்ந்து திருவூஞ்சலும் இடம் பெற்று அம்பாள் வீதியுலா வலம் வருவார். (203)

* * *

பருத்தித்துறை புனித தோமையார் தேவாலய வருடாந்தத் திருவிழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை கொடியேற் றத்துடன் ஆரம்பமாகிறது.

நவநாள் உற்சவங்களைத் தொடர்ந்து எதிர்வரும் 2ஆம் திகதி திங்கட்கிழமை நற்கருணை ஆராதனையும் திருப்பலியும் இடம் பெற்று மறுநாள் காலை கூட்டுத் திருப்பலியும் திருச்சொரூப பவனியும் இடம்பெறும்.

* * *

ஈச்சமோட்டை கலட்டிப் புலம் ஞானவைரவர் ஆலய ஆனி உத்தரத் திருவிழா இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

அபிஷேகம் விசேட பூசைகள் இடம் பெற்று சுவாமி உள்வீதியுலா வருவார். (203)

# 'செவனகல' சீனித் தொழிற்சாலைச் செயற்பாட்டை குழப்பவேண்டாம் என அமைச்சருக்குப் பணிப்பு!

## உயர் நீதிமன்றம் கடும் உத்தரவு !!

கொழும்பு,ஜூன்22

செவனகல சீனித் தொழிற்சாலையின் நடவடிக்கைகளுக்குக் குந்தகமான செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டாம் என அமைச்சர் ஜகத் புஷ்பகுமாரவுக்கு கடும் எச்சரிக்கையிலான தடை உத்தரவு ஒன்றை விடுத்திருக்கின்றது உயர் நீதிமன்றம்.

அதேசமயம், அந்தத் தொழிற்சாலையின் செயற்பாடுகளுக்குக் குந்தகம் விளைவிக்கும் விதத்தில் அமைச்சர் ஜகத் புஷ்பகுமார நடந்துகொண்டார் எனக்கூறப்படும் குற்றச்சாட்டுக் குறித்து விசாரிக்கும்படி ஜனாதிபதியின் செயலாளருக்கு நீதிமன்றம் பணிப்புரை விடுத்தது.

அதேவேளை, செவனகல சீனித் தொழிற்சாலையை இயங்கவிடாமல் தடுப்போரை உடன் கைதுசெய்து நீதிமன்றத்தில் நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கும்படியும், இந்த உத்தரவுக்கு அமைய மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை குறித்து பதினான்கு நாட்களுக்குள் உயர் நீதிமன்றுக்கு அறிக்கை சமர்ப்பிக்கும்படியும் பொலிஸ்மா அதிபருக்கு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது.

செவனகல சீனித்தொழிற்சாலை சார்பில் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனுவை கடந்த செவ்வாய்க்கிழமை விசாரணைக்கு ஏற்றுக்கொண்ட உயர் நீதிமன்றம் மேற்படி உத்தரவுகளைப் பிறப்பித்தது.

பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா, நீதியரசர்கள் திராணி திலகவர்தனா, அன்ட்ரூ சோமவன்ஸ ஆகியோரைக்கொண்ட ஆயமே இந்த உத்தரவுகளை வழங்கியது.

**அமைச்சர் 5 கோடி ரூபா லஞ்சம் கேட்டதாகக் குற்றச்சாட்டு**

மேற்படி செவனகல சீனி ஆலை தொழிற்சாலையை குழப்பம் எதுமின்றி நடத்த அனுமதியளிப்பதாயின் அதற்கு, ஆலை நிர்வாகம் தமக்கு ஐந்துகோடி ரூபா லஞ்சம் தரவேண்டும் என அமைச்சர் ஜகத் புஷ்பகுமார மிரட்டினார் என்றும்-

அதற்குத் தாங்கள் இணங்காததால் ஆட்களை வைத்து, தங்கள் தொழிற்சாலையை இயங்கவிடாது அமைச்சர் புஷ்பகுமார தடுத்துவருகின்றார் என்றும் -

சீனித் தொழிற்சாலை நிர்வாகம் மேற்படி நீதிமன்றில் தாக்கல் செய்த மனுவில் குறிப்பிட்டிருக்கின்றது.


**நீதிமன்ற உத்தரவை அமைச்சர் மீறினார்....**

மனுவை ஆராய்ந்த பிரதம நீதியரசர் அங்கு கடும்பயங்கரவாதம் கட்டவிழ்த்து விடப்பட்டிருப்பது போலத் தோன்றுகின்றது எனக் குறிப்பிட்டார். நீதியரசர், மேற்படி அமைச்சருக்கு எதிரனா குற்றச்சாட்டுக் குறித்து விரிவான விசாரணை நடத்தும்படி ஜனாதிபதியின் செயலாளரைப் பணித்தார். (சி)

## மௌனமுற்றிருப்பதே தெய்வத்தின் மொழி

தந்தையை இகழ்பவன் தன்னையே இகழ்ந்து கொள்கிறான். முறைதவறிக் கையாண்டால் புல்லும் கையைக் காயப்படுத்திவிடும். நோயுற்றுக் கிடப்பவனே நோயற்ற வாழ்வில் உள்ள சீர்மையை அறிகிறான்.

உலகில் பெரிய பணக்காரன் யார்? ஆசையை வென்றவனே பெரிய பணக்காரன். மௌனமுற்றிருப்பதே தெய்வத்தின் மொழி. அந்த மொழியை நீயும் கற்றுவா. பிறரைப் பற்றி அபிப்பிராயம் சொல்லுவதன் மூலம் ஒரு மனிதன் தனது தரத்தை வெளியிடுகிறான். எண்ணிய எண்ணம் நல்லதாயினும் கெட்டதாயினும் அது எண்ணியவனிடத்தே திரும்பி வந்து சேருகிறது.




உலக விஷயங்களுக்குச் செவி கொடாதிருந்து பழகு. அப்பொழுது இறைவனுடைய ஆணை உனக்குக் கேட்கும்.

நான்கு கால் இருந்தும் குதிரை சில வேளைகளில் இடர்ப்படுகிறது. இரண்டு கால் உடைய மனிதன் ஏன் இடர்ப்படமாட்டான்?

அறிவிலியோ தான் அடைந்த வெற்றியை விளம்பரம் பண்ணுகிறான். அறிவாளியோ தான் செய்த தவறுகளை எண்ணிப்பார்க்கிறான்.

நிறை நிலா மறை நிலாவாக மாறுவதால் உலகுக்கு நஷ்டமொன்றுமில்லை. ஆக்கமானது அழிவாக வடிவெடுக்கும் போது ஞானிக்கு நஷ்டமொன்றுமில்லை.

காற்றிலும், மழையிலும், வெயிலிலும், பனியிலும் மலையானது மாறுதல் அடைவதில்லை. புகழ்ச்சியிலும் இகழ்ச்சியிலும் சான்றோன் மனம் மாறுதல் அடைவதில்லை.

நன்றி: அருள் ஒளி




**இருள் நீக்கி ஆறுதலைத் தாரும் தாயே!**

விந்தைகள் புரிந்திடும் புவனேஸ்வரி அம்மா!
விரும்பியே உறையுமிடம் நயினையம்பதி யாகும்
சிந்தையில் அவள்தனையே எந்நாளும் இருத்தித்
தினந்தினமே தொழுகின்றேன் தேவிமுகம் பார்த்து
இந்த நிலை கண்டுனது உள்ளமிரங் காதா
இனியெமக்கு உனையன்றி உற்றதுணை ஏது
கைலாச வாகனத்தில் வலம் வருவாய் தாயே
கருணையுடன் இருள் நீக்கி ஆறுதலைத் தாரும்!

- வ.யோகானந்தசிவம்.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

நீங்கள் பீனிசம், பீனிச வாய்வு, இளநரை, தலையிடி, தலைப்பாரம், மூக்கினால் இரத்தம் வடிதல், காதடைப்பு, கண்மங்கல் என்பவற்றால் அவதிப்படுகின்றீர்களா?
இதோ பாவியுங்கள்!
கண்ணுக்குக் குளிர்ச்சியும் முகத்திற்கு அழகும் உண்டாக்கி கூந்தலை நீளமாகவும், கறுப்பாகவும், அழகாகவும் வளரச்செய்யும் சித்த ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட

**சித்தாரா பொன்னாங்காணி தைலம்**

யாழ்.குடாநாட்டின் அனைத்து பார்மஸிகளிலும் கடைகளிலும் பெற்றுக் கொள்ளலாம்.

Manufactured By:
**SITHARA PRODUCTS**
Puttalam Road,
Chilaw.
(Reg.No. 6382)AR/PR/No-228

யாழ்.மாவட்ட
ஏக விநியோகஸ்தர்:-
**சிவா நறுமணப் பூங்கா**
இல.288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பேசி இல. 021-222-2567

**குறிப்பு:** எங்களின் பொன்னாங்காணி தைலத்தின் பெட்டியில் எழுத்து மிகவும் தெளிவாகத் தெரியும். போலியான பொன்னாங்காணி தைலத்தின் எழுத்து தெளிவற்றதாக இருக்கும். அத்துடன் போலிப் பெட்டிகளின் அடிப் புறத்தில் உற்பத்தித் திகதியும் முடிவுத் திகதியும் குறிப்பிடப்படவில்லை. இதிலிருந்து போலித் தயாரிப்புக்களை நீங்கள் கண்டு கொள்ளலாம். (சி-52710)

## முதலாவது பிறந்ததின வாழ்த்து

22 . 06 . 2007



யாழ்ப்பாணம், அரியாலையில் வசித்தவரும் தற்போது பிரான்ஸில் வசிப்பவர்களுமான
**திரு.திருமதி குகரூபன்- லோகினி தம்பதியரின்**
**செல்வப் புதல்வன் அஸ்வின் (அபிஷன்)**
தனது முதலாவது பிறந்தநாளை இன்று (22.06.2007) வெள்ளிக்கிழமை பிரான்ஸில் உள்ள தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார்.

அஸ்வின் குட்டியை அன்பு அப்பா, அம்மா, அன்பு அக்கா (பிருந்தா) ஆகியோரும் இலங்கையில் வசிக்கும் அன்பு அப்பப்பா, அப்பம்மா பிரான்ஸில் இருக்கும் அம்மப்பா, அம்மம்மா ஜேர்மனியில் இருக்கும் பெரிய மாமா (குட்டி), பெரியத்தை (குகரூபனா), மச்சான்மார் லோஜன், லக்ஷன் ,இலங்கையில் இருக்கும் சித்தப்பா (குகதீபன்), சித்தி (நளினி), பெரியக்கா (நதீஷனா), சின்னக்கா (நதீபனா), குட்டிச்சித்தப்பா (குகசீலன்), சின்னத்தை (குகசோபனா), பிரான்ஸில் வசிக்கும் பெரியமாமா (ரவி), பெரியமாமி (மாலதி), மச்சான் (பிரேமன்), லண்டனில் இருக்கும் ஜெயமாமா மற்றும் பிரான்ஸில் இருக்கும் தயா மாமா, மாமி, பவன்மாமா, பகீர்மாமா மற்றும் உற்றார், உறவினர் அனைவரும் பலகலைகளும் கற்று பல்லாண்டு வாழ்கவென வாழ்த்தி அவரை நலமுடன் இருக்க வேண்டும் என அரியாலை சித்தி விநாயகரை வேண்டுகின்றனர்.

செ.கந்தசாமி (அப்பப்பா),
க.குகனேஸ்வரி (அப்பம்மா),
"குககந்தகிரி"
28,சின்னாலங்கண்டு வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.

K.Kugarupan,
7- Plocegedles -Pompidow,
93160- Noisy Le Grand,
France.

**அஸ்வின்**

(61775)

---

### யா/மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை
### நிறுவியவர் நினைவு தினமும் பரிசளிப்புத் தினமும் - 2007

காலம்: 24.06.2007 ஞாயிற்றுக்கிழமை
நேரம்: காலை 09.01 மணி
இடம்: பாவலர் துரையப்பாபிள்ளை மண்டபம்
தலைவர்: திருமதி சிவமலர் அனந்தசயனன் (அதிபர்)

பிரதம விருந்தினர்: திரு.க.கணேஷ் (அரச அதிபர், யாழ். மாவட்ட செயலகம்)
நினைவுப் பேருரை: பேராசிரியர் என்.சண்முகலிங்கன் (சமூகவியல் பேராசிரியர், தலைவர், சமூகவியல்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)
தலைப்பு: சமூகமேம்பாட்டுக்கான ஊடக அறிவுக்கல்வி
கௌரவ விருந்தினர்: கலாநிதி சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி (J.P)
பரிசில் வழங்கல்: திருமதி பரமேஸ்வரி கணேஸ்
நன்றியுரை: திரு.இ.சிறிதரன் (செயலாளர், பழைய மாணவர் சங்கம்)

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்**

(61951) கல்லூரிச் சமூகம்.

---

## வீட்டுக்கிருத்திய அழைப்பு



அமரர்
**வேலன் ஆறுமுகம்**
பிறப்பு: 10*05*1933
இறப்பு: 24*05*2007

கடந்த 24.05.2007 அன்று முருகனின் அடியைச் சேர்ந்த எமது குலதெய்வம் வேலன் ஆறுமுகம் அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் நாளை (23.06.2007) சனிக்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

உடுவில் தெற்கு,
மானிப்பாய்.
(61770)
ஆ.இராசகுமார்
(மகன்)

---

## புதிய பிரிவுகள் ஆரம்பம்

**aat (SriLanka)**
Foundation level, Intermediate level & Final
Medium - Tamil & English Exam.-June 2007
Minimum Requirement : G.C.E.O/L
5 Passes or GCE A/L 2 Passes
விரிவுரைகள் ஆரம்பம்: 23.06.2007
Medium : English & Tamil

Further Details
**Director**
**Jaffna College Undergraduate Dept.**
**464, Hospital Road,**
(Near Commercial Bank),
**Jaffna.**
(சி/52718)

---

## கண்ணீர் அஞ்சலி

எமது அலுவலகத்தில் நிதிக்கிளையில் கடமையாற்றும் **பி.க.கனியூட்** அவர்களின் தந்தை
**அந்தோனிப்பிள்ளை பிரான்சிஸ்**
அவர்கள் (20.06.2007) அன்று மன்னாரில் காலமாகிவிட்டார்.
அவரது பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு, அவரது ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

**நலன்புரிக்கழகம்,**
**வலயக்கல்வி அலுவலகம்,**
**யாழ்ப்பாணம்.**
(சி 52729)

---

## ST.JOHN'S COLLEGE JAFFNA

## ANNUAL PRIZE GIVING 2007

Saturday 23 rd June 2007
at 10 a.m

*Chief Guest*
**Prof P. Balasundarampillai**
B.A.Hons (Ceylon), Ph.D (Durham)
**Emeritus Senior Professor of Geography**
**Former Vice Chancellor**
**University of Jaffna**
**&**
**Mrs. Rajalakshmi Balasundarampillai**
B.A.Hons (Ceylon), P.G.D.E. (Jaffna)

*Chairman*
Ven S P Nesakumar
Archdeacon of Jaffna

Parents, Old Boys & Well - wishers are cordially invited

**Principal, Staff & Students**

(C/52678)

---

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 14 - 07 - 1960



விண்ணில் 03 - 07 - 2006

**அமரர் ஆறுமுகம் துரைராஜசிங்கம்**
(திதி : 22.06.2007)

ஆண்டொன்று சென்றது ஐயா
ஆறவில்லை எம் துயரம்
அவனியில் நாம் வாழ வழிகாட்டிய தெய்வமே!
ஆயிரம் உறவுகள் இருந்துமென்ன?
அவைகள் அனைத்தும் உங்கள்
அன்புக்கு ஈடாகுமா?
ஆண்டு ஒன்றென்ன? பல சென்றாலும்
எங்கள் விழிகளில் என்றும்
நிலைத்திருக்கும் உங்கள் இனிய முகம்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய தினமும் வேண்டுகிறோம் இறைவனை.

வெளிகம் தோட்டம்,
துன்னாலை கிழக்கு,
கரவெட்டி.
(61982)

தாய், மனைவி, பிள்ளைகள்,
சகோதர, சகோதரிகள்,
மருமக்கள்:- சுதன், சுவேதா,
சுயாதா.

---

### முதியோர் சங்கம் அங்குரார்ப்பணம்

வலி.தென்மேற்கு,ஜூன் 22

சில்லாலை தெற்கு சாந்தை கிராமத்தில் முதியோர் சங்கம் ஒன்று அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

சாந்தை விநாயகர் கிராம அபிவிருத்தி சங்க மண்டபத்தில் கடந்த திங்கட்கிழமை முற்பகல் நடைபெற்ற அங்குரார்ப்பண நிகழ்வில் வலி. தென்மேற்கு பிரிவு சமூக சேவை உத்தியோகத்தர் வே.அருந்தவராசா கலந்து கொண்டு சங்கத்தை அங்குரார்ப்பணம் செய்து வைத்தார்.

(202-135)

---

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



மலர்வு 19*05*1928
உதிர்வு 23*05*2007

கடந்த 23.05.2007 அன்று சிவபதமடைந்த எமது தாயாரின் துயரத்தில் பங்குபற்றியும் இறுதிக் கிரியைகளில் கலந்துகொண்டும் நேரடியாகவும் தொலைபேசி மூலம் அனுதாபத்தைப் பகிர்ந்து கொண்டோருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவிப்பதோடு, இன்று (22.06.2007) வெள்ளிக்கிழமை நடைபெறவிருக்கும் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகளிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

அமரர்
**கோவிந்தபிள்ளை இலட்சுமி**

192/1, நாவலர் வீதி,
பெருமாள் கோவிலடி, யாழ்ப்பாணம்.
தொ.பே.: 021 4590382

கோவிந்தபிள்ளை
விஜயகுமார் (மகன்).
(61788)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# தமிழர்களை அவர்தம் தாயகத்திலிருந்து விரட்டியடிக்கும் நடவடிக்கை இது!

திருகோணமலை மாவட்டத்தில் தற்போதைய யுத்த நிறுத்த காலத்தைப் பயன்படுத்தித் தான் மேற்கொண்ட பெரும் இராணுவ நடவடிக்கை மூலம் புதிதாகக் கைப்பற்றிய சம்பூரை உள்ளடக்கிய - மூதூர் கிழக்குப் பிரதேசத்தை அதிஉயர் பாதுகாப்பு வலயமாக அரசு பிரகடனப்படுத்தியிருக்கின்றது.

ஜனாதிபதியினால் விடுக்கப்பட்ட விசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் இந்த நில ஆக்கிரமிப்பும், கபளீகரமும் சட்ட அந்தஸ்தைப் பெற்றிருக்கின்றன. அப்பிரதேசத்திலிருந்து கொடூரப் படை நடவடிக்கை மூலம் பலவந்தமாக வெளியேற்றப்பட்ட தமிழ் மக்கள், அரச படைகள் ஆக்கிரமித்துள்ள தமது தாயக பூமிக்கு இனித் திரும்ப முடியாது. மீளக் குடியமர இயலாது. படைகளின் கட்டுப்பாட்டை மீறி அப்பிரதேச மக்கள் யாரும் தமது இடங்களுக்குள் நுழைந்தால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

சுமார் பதினையாயிரம் தமிழர்களின் தாயக பூமி இப்போது இவ்வாறு சிங்கள அரசினால் கபளீகரம் செய்யப்பட்டிருக்கின்றது என்பதை திருமலைத் தமிழ் மக்கள் பேரவை விசனத்தோடும், எரிச்சலோடும், ஆத்திரத்துடனும் சுட்டிக்காட்டியிருக்கின்றது.

திருகோணமலைத் துறைமுகத்தைச் சூழ - சுற்றாடலில் - சிங்களவர்கள் வசிக்கும் பிரதேசங்களையும் கிராமங்களையும் அப்படியே விட்டுவிட்ட சிங்கள அரசு, துறைமுகத்துக்கு பன்னிரண்டு கடல் மைல்கள் தாண்டி- கடலுக்கு அப்பால் இருக்கும் - தமிழர்களின் சம்பூர் பிரதேசத்தை திருகோணமலைத் துறைமுகப் பாதுகாப்புக்காக என்ற பெயரில் உயர் பாதுகாப்பு வலயமாக சுவீகரித்து அறிவித்திருக்கின்றது என்ற வேடிக்கையையும் திருகோணமலை தமிழ் மக்கள் பேரவை சுட்டிக்காட்டியிருக்கின்றது.

தமிழ் மக்களின் தாயக பூமியை ஆக்கிரமித்து, அங்கிருந்து தமிழர்களை விரட்டியடித்து, அப்பிரதேசங்களை சிங்கள மயப்படுத்தும் தென்னிலங்கைப் பௌத்த - சிங்களப் பேரினவாதச் சிந்தனையின் மற்றொரு பிரதிபலிப்பே இந்த ஆக்கிரமிப்பும் என்பதில் சந்தேகம் ஏதுமில்லை.

ஏற்கனவே வடக்கில் - யாழ். குடாநாட்டில் - தமிழர்களின் பாரம்பரிய வாழிடங்களில் மூன்றில் ஒரு பகுதியை பாதுகாப்பு உயர்வலயம் என்ற பெயரில் ஆக்கிரமித்து, அங்கு குடியிருந்த தமிழ் மக்களை அகதி முகாம்களுக்கு விரட்டியடித்து, தசாப்தகாலமாக அவர்களை அகதி முகாம்களில் அல்லற்பட்டு அவலப்பட வைத்திருக்கும் கொழும்பு அரசு, அந்தக் கொடூரத்தின் மற்றொரு அங்கத்தை கிழக்குத் திருகோணமலையில் இப்போது கட்டவிழ்த்துவிட்டிருக்கின்றது.

தமிழ் விவசாயிகளின் மிகவும் வளமான விவசாயப் பூமியையும், கடற்றொழிலுக்கான கரையோரப் பிரதேசங்களையும் வடக்கில் உயர் பாதுகாப்பு வலயமாக ஆக்கிரமித்து பல லட்சம் தமிழர்களை ஜீவாதாரப் பிரச்சினைக்குள் மூழ்கடித்திருக்கும் அரசு, அதே கொடூரத்தை இப்போது திருகோணமலையில் அரங்கேற்றுகின்றது.

பௌத்த - சிங்களப் பேரினவாதத்தின் இத்தகைய நடவடிக்கை இன்று நேற்று புதிதாக ஆரம்பமான விடய மல்ல. சுமார் அறுபது ஆண்டுகளுக்கு முன்னர், இலங்கையின் அரசியல் அதிகாரம் பெரும்பான்மையினர் என்ற முறையில் பௌத்த - சிங்கள பேரினவாதிகளிடம் ஒப்படைக்கப்பட்ட காலம்தொட்டே, இத்தகைய போக்கு நடைமுறைப்படுத் தப்பட்டு வந்திருக்கின்றது என்பதே சரித்திர உண்மை யாகும்.

சிறுபான்மையினரான தமிழர்களின் தனித்துவ இன அடையாளத்தையும் அதன் அடிப்படையில் அமைந்த அவர்களின் தாயக உரிமைக் கோட்பாட்டையும் சிதறடித்து, அழித்து ஒழிப்பதற்கு இலங்கை சுதந்திரம் பெற்ற காலம் முதல் சிங்கள அரசுகள் மேற்கொண்ட திட்டமிட்ட ஒடுக்குமுறையின் கொடூர - குரூர - வடிவமே சிங்களக் குடியேற்றங்கள்.

1948இலிருந்து முழு மூச்சில் ஆரம்பிக்கப்பட்ட இந்த முயற்சி தமிழர் பிரதேசத்தில் ஏறத்தாழ மூவாயிரம் சதுர மைல் பரப்பை விழுங்கிவிட்டது.

தமிழ் மக்களை அவர்களுடைய பாரம்பரிய தாயக பூமியிலேயே சிறுபான்மையினராக்கி, அவர்களின் சனத்தொகை விகிதாசாரத்தை சிதைத்து, தமிழர் தாயகக் கோட்பாடு என்ற உரிமைக் கோஷத்தை அடியோடு நசுக்குவதற்காக அடுத்தடுத்து வந்த அரசுகளால் இந்த இனச் சிதறடிப்பு நடவடிக்கை முழு மூச்சில் முன்னெடுக்கப்பட்டது.

தமிழர் தாயகமான வடக்கையும் கிழக்கையும் இப்போது சட்டத்தின் மூலம் - நிர்வாக ரீதியாக - துண்டுபோட்டுள்ள சிங்களம், அதனை புவியியல் ரீதியாக மேற்கொள்வதற்காக ஆறு தசாப்தங்களுக்கு முன்னரே ஆரம்பித்த குள்ளநரித்தன நடவடிக்கையே வடக்கையும், கிழக்கையும் இணைக்கும் மையப் பிரதேசத்தில் திட்டமிடப்பட்ட வகையில் அரச ஏற்பாட்டில் மேற்கொள்ளப்பட்டு தற்போது வரை விஸ்தரிக்கப்பட்டுவரும் சிங்களக்குடியேற்றமாகும்.

ஏற்கனவே கல்ஓயா, மதுறு ஓயா ஆகிய நதிகள் தொடர்பான பாரிய குடியேற்றத் திட்டங்கள் மட்டக்களப்பு மாவட்ட முஸ்லிம் மக்களின் பெருந்தொகைக் காணிகளைக் கபளீகரம் செய்துவிட்டது. அல்லை, கந்தளாய் சிங்களக் குடியேற்றத் திட்டங்களும் யன் ஓயா நதித் திட்டமும் திருகோணமலைப் பகுதியை விழுங்கிக்கொண்டு விட்டன.

தமிழரின் பாரம்பரிய நிலங்களை வல்வந்தமாகப் பறித்தெடுக்கும் இந்தத் தொடர்ச்சியான நடவடிக்கையின் வரிசையாகவே சம்பூரை உள்ளடக்கிய மூதூர் கிழக்குப் பிரதேச ஆக்கிரமிப்புமாகும்.

தாயகப் பூமியிலிருந்து பாரம்பரியமாக வசித்து வந்த தமிழரை விரட்டியடிக்கும் சிங்கள ஆளும் வர்க்கத்தின் இனவெறிக் கொள்கையின் குரூரத் தன்மையை அம்பலப்படுத்தும் மற்றொரு கொடூரம் இது என்றால் அது மிகையாகாது.

## காங்கேசன் மோதலில் மீட்கப்பட்ட 4 சடலங்கள் யாழ்.ஆஸ்பத்திரியில்

யாழ்ப்பாணம்,ஜூன் 22

பருத்தித்துறைக் கடலில் கடந்த செவ்வாய்க்கிழமை கடற் புலிகளுக்கும் கடற் படையினருக்கும் இடையில் நடை பெற்ற மோதலின்போது, தம்மால் கைப் பற்றப்பட்டதாகத் தெரிவித்து நான்கு விடுதலைப் புலி உறுப்பினர்களின் சடலங்களை காங்கேசன்துறைப் பொலிஸார் யாழ்.ஆஸ்பத்திரியில் நேற்று நண்பகல் ஒரு மணியளவில் ஒப்படைத்தனர்.

இந்தச் சடலங்கள் ஒப்படைக்கப்பட்டமை தொடர்பாக மல்லாகம் நீதிமன்றத்தில் அறிக்கை ஒன்றையும் பொலிஸார் சமர்ப்பித்தனர்.

யாழ்.ஆஸ்பத்திரியில் சடலங்களைப் பார்வையிட்ட மல்லாகம் நீதிவான் திருமதி ச.இளங்கோவன் பிரதே பரிசோதனைக்கு உத்தரவிட்டார்.

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு மூலம் விடுதலைப் புலிகளிடம் சடலத்தை ஒப்படைக்க ஏற்பாடு செய்யும் படியும் -

இல்லையேல் அரச செலவில் அடக்கம் செய்யும் படியும் - நீதிவான் உத்தர விட்டார்.

இதேவேளை -

இச்சடலங்களை பொறுப்பேற்பது குறித்து செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு விடுதலைப் புலிகளுடன் தொடர்பு கொண்டுள்ளதாகத் தெரியவந்தது. (அ-1-78)

## கல்வியியற் கல்லூரியில் 2 நாள் செயலமர்வு

யாழ்ப்பாணம்,ஜூன் 22

யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியின் மாணவர்கள் உள்ளகப் பயிற்சி பெறும் பாடசாலைகளின் அதிபர்கள், தொழில் வழிப்படுத்துநர்களுக்கான செயலமர்வு இன்று வெள்ளிக்கிழமையும் நாளை சனிக்கிழமையும் காலை 9 மணிமுதல் கல்லூரியில் நடைபெறவுள்ளது. கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி எஸ்.கே. யோகநாதன் இத்தகவலைத் தெரிவித்துள்ளார். (1-203)

## சாதனையாளர் விருது வழங்கும் நிகழ்வு மல்லாகத்தில்

யாழ்ப்பாணம்,ஜூன் 22

மக்கள் வங்கியின் சிசு உதான சாதனையாளர் திட்டத்தின் கீழ் 2006 இல் தெரிவு செய்யப்பட்ட யாழ்.மாவட்ட வெற்றியாளர்கள் 5 பேரில் வலிகாமத்தில் இருந்து தெரிவுசெய்யப்பட்ட இரண்டு மாணவர்கள் விருது வழங்கி கௌரவிக்கப்படவுள்ளனர். நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு மல்லாகம் மகா வித்தியாலயத்தில் இந்நிகழ்வு இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி மாணவி ஆ.அனுஷியா, தெல்லிப்பளை யூனியன் கல்லூரி மாணவி இ. மைதிலி ஆகியோரே விருது வழங்கி கௌரவிக்கப்படவுள்ளனர்.

மக்கள் வங்கியின் வட வலய உதவிப் பொதுமுகாமையாளர் த.க.ஆனந்தராஜா தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பதில் துணைவேந்தர் பேராசிரியர் இ.குமாரவடிவேலும் சிறப்பு விருந்தினர்களாக மேலதிக் மாகாணக் கல்விப் பணிப்பாளர் வி.ரி. செல்வரத்தினம், வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாக கோட்டக் கல்விப் பணிப்பாளர்களான ச.கயிலாசநாதன், செ.குபேரநாதன், துரை எங்கரசு, சி. கந்தசாமி ஆகியோரும் கலந்துகொள்வர்.

## நீதித்துறை ஆணைக்குழு சுயேச்சையாக இயங்க முடியாது என்று சபாநாயகர் அறிவிப்பு

கொழும்பு,ஜூன்22

நீதித்துறை சேவைகள் ஆணைக் குழுவினால் சுயேச்சையாக செயல்பட முடியாதென்று சபாநாயகர் டபிள்யு ஜே.எம். லொக்கு பண்டார கடந்த செவ்வாயன்று நாடாளுமன்றில் தீர்ப்பளித்தார்.

நீதித்துறை சேவைகள் ஆணைக் குழுவை நாடாளுமன்றமே நியமிக்கின்றது. அதற்குத் தேவையான நிதி ஆதாரங்களையும் அதுவே வழங்குகின்றது. எனவே நாடாளுமன்றத்துக்கு பதில் கூறாத வகையில் அதனால் சுயேச்சையாக செயற்பட முடியாது என்று சபாநாயகர் கூறினார்.

மேற்படி ஆணைக்குழுவை நாடாளுமன்றம் கேள்வி கேட்க முடியாது என்ற அடிப்படையில் சில தகவல்களை அக் குழு வழங்க மறுத்துவிட்டது என்று அரசாங்கத்தின் பிரதம கொறடாவான ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே சபையில் தெரிவித்ததையடுத்து மேற்படி தீர்ப்பினை சபாநாயகர் வழங்கினார்.

ஐ.தே.கட்சி உறுப்பினர் ரஞ்சித் அலுவிகாரை கொழும்பு மாவட்ட நீதிமன்ற பதிவேடு சம்பந்தமாக எழுப்பிய வாய் மூலமான கேள்வியொன்று தொடர்பாக சில தகவல்கள் தேவைபட்டதாகவும் ஆனால் ஆணைக்குழு அதனை வழங்க மறுத்துவிட்டதாகவும் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே தெரிவித்தார்.

இந்தவிடயம் தொடர்பாக தீர்ப்பொன்றை வழங்குமாறு அவர் வற்புறுத்தினார். இந்த விடயத்தை கட்சித் தலைவர்கள் கூட்டத்திலும் எழுப்புவதாக சபாநாயகர் தெரிவித்தார். (அ-ப)

## மீண்டும் தம்மை பொலிஸில் மாட்டிவிட சில சக்திகள் முயல்கின்றனவாம்

### *சிறிபதி சூரியாராச்சி சபாநாயகரிடம் முறைப்பாடு*

கொழும்பு ஜூன் 22

தம்மை மீண்டும் பொலிஸ் விசாரணைக்குட்படுத்துவதற்கு சில சக்திகள் முயற்சி எடுத்துவருகிறார்கள் என்று பதவி விலக்கப்பட்ட முன்னாள் அமைச்சர் சிறிபதி சூரியாராச்சி நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

2003ஆம் ஆண்டு பொலன்நறுவையில் இடம்பெற்ற கொலை யொன்றுடன் தமது பெயரை சம்பந்தப்படுத்தி மீண்டும் பொலிஸ் விசாரணைகக்குள் தம்மை இழுத்துவிட அந்த சக்திகள் முயல்கின்றன என்று அவர் கூறினார். நாடாளுமன்றில் உரிமைப் பிரச்சினை ஒன்றைக் கிளப்பி பேசிய சிறிபதி சூரியாராச்சி அரசாங்கத்துக்கு சொந்தமான தொலைக்காட்சி நிகழ்ச்சியொன்றில் கடந்த செவ்வாயன்று தாம் ஒரு கொலையை செய்விப்பதற்காக ஒப்பந்தம் ஒன்றை செய்து கொண்டதாகக் குற்றஞ்சாட்டப்பட்டது என்று கூறினார்.

இந்தக் குற்றச்சாட்டின் காரணமாக ஒரு மக்கள் பிரதிநிதியென்ற முறையில் தமது பணிகளை செய்ய முடியாதிருப்பதாக அவர் தெரிவித்தார்.

ஏற்கனவே அடிப்படையற்ற குற்றச்சாட்டுக்களின் மீது தாம் நீதிமன்ற இடையூறுகளுக்கு ஆளாக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதற்குப் பதிலளித்த சபாநாயகர் டபிள்யூ ஜே.எம் லொக்கு பண்டார இந்த விடயத்தைத் தாம் ஆராய்ந்து பார்ப்பதாகவும் அவசியமெனக்கருதின் சிறப்புக் குழுவின் நடவடிக்கைக்கு பாரப்படுத்துவதாகவும் உறுதியளித்தார். (அ-ப)




நவ்று தீவில் தங்கியுள்ள ஈழ அகதிகள் சர்வதேச அகதிகள் வாரத்தை முன்னிட்டு அங்கு அமைதிப் போராட்டத்தில் ஈடுபட்டபோது எடுக்கப்பட்ட படம்.

(செய்தி 04ஆம் பக்கத்தில்)

## பூசகர் குடும்பத்துக்கு நஷ்ட ஈடாக 5 லட்சம் ரூபா

கொழும்பு, ஜூன் 22

வாகரை புதுப்பிள்ளையார் கோவில் பூசகர் செல்லையா பரமேஸ்வரக்குருக்களின் குடும்பத்திற்கு 5 லட்சம் ரூபாவை நஷ்ட ஈடாக வழங்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது என்று தகவல் மற்றும் ஊடகத்துறை அமைச்சர் அனுர பிரியதர்ஷன யாப்பா தெரிவித்தார்.

நேற்று அரச தகவல் திணைக்களத்தில் அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் இத்தீர்மானத்தை அறிவித்தார்.

வாகரை புதுப்பிள்ளையார் கோயில் பூசகர் செல்லையா பரமேஸ்வரன் குருக்கள் வாகரைப்பிரதேசம் இராணுவக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்ட பின்னர் அங்கு விஜயம் செய்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கு பூமாலை அணிவித்து வரவேற்றார். மறுநாள் அவர் அடையாளம் தெரியாத ஆயுதபாணிகளால் சுட்டுக் கொல்லப்பட்டார். (சி)

## உலக உணவுத் திட்ட நிவாரண விநியோகம் இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஜூன் 22

உலக உணவுத் திட்டத்தின் கீழ் நலிந்த பிரிவினருக்கான உணவுப் பொருள் நிவாரண விநியோகத்தை இன்று ஆரம்பிக்குமாறு செயலக திட்டப் பணிப்பாளர் ம.பிரதீபன் சகல ப.நோ.கூ.சங்கங்களையும் கேட்டுள்ளார்.

11.08.2006 இற்குப் பின் இடம் பெயர்ந்தவர்கள், கடற் றொழிலாளர்கள், நலிவுற்றோர் ஆகிய தரத்தில் உள்ள குடும்பங்களுக்கே இந்த நிவாரணம் வழங்கப்படவிருக்கின்றது.

மேற் கூறப்பட்ட தரப்பினருக்கான ஏப்ரல் மாதத்தின் 2ஆம் 3ஆம் வார விநியோகத்தை இன்று ஆரம்பித்து எதிர்வரும் 30ஆம் திகதிக்குமுன் விநியோகத்தைப் பூர்த்திசெய்ய வேண்டும் என்றும் அவர் கேட்டுள்ளார்.

இன்று ஆரம்பமாகும் விநியோகத்தில் கோதுமை மா, சீனி ஆகிய பொருள்கள் மட்டுமே வழங்கப்படும் என்றும் பருப்பு, மரக்கறி எண்ணெய் ஆகியன பின்னர் வழங்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

ப.நோ.கூ.சங்கங்கள் செயலகத்தின் உலக உணவுத் திட்ட மாவட்டக் கண்காணிப்புப் பிரிவில் வழங்கற் கட்டளையை பெற்று விநியோகத்தை ஆரம்பிக்க வேண்டும் என்று கேட்கப்பட்டுள்ளனர். (அ-1)

## பாலத்துறையில் இளைஞர் படுகொலை

கொழும்பு - பாலத்துறைப் பகுதியில் இளைஞர் ஒருவர் இனந்தெரியாத நபர்களால் கூரிய ஆயுதங்களால் தாக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு 11.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது. கொலை செய்யப்பட்டவர் 21 வயதுடைய இளைஞர் எனத் தெரிய வந்துள்ளது.

தனிப்பட்ட விரோதம் காரணமாக இந்தக் கொலை இடம்பெற்றதாக பாலத்துறைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். இளைஞனின் சடலம் உடனடியாக அடையாளம் காணப்படவில்லை.

## நாளை

ஆனி - 09 சனிக்கிழமை
23.06.2007
திதி : அட்டமி மு.ப. 09.48
நட்சத்திரம் : அத்தம் பின்னிரவு 05.51
சுபநேரம் : 02.54 - 04.24
ராகுகாலம் : 09.54 - 10.24

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடும்பிமலை முகாமில் புலிகளிடம் 2 சிப்பாய்கள்

தமிழீழ விடுதலைப் புலிகளின் குடும்பிமலை (தொப்பிகல) தளத்தில் படைச்சிப்பாய் ஒருவர் தடுத்து வைக்கப்பட்டுள்ளார் என்ற தகவலை செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு தெரிவித்துள்ளது.

கடந்த 9 மாதங்களுக்கு முன்னர் இந்தச் சிப்பாய் விடுதலைப்புலிகளால் கைதுசெய்யப்பட்டு, தொடர்ந்து தடுத்து வைக்கப்பட்டுள்ளார் என்று செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

''குடும்பிமலை - விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் குறிப்பிட்ட படைச்சிப்பாயை கைதுசெய்திருக்கும் அதேநேரம் விடுதலைப் புலிகள் மற்றொரு சிப்பாயையும் கைதுசெய்திருக்கிறார்கள் என்று தகவல்கள் வெளியாகியிருக்கின்றன. - என்றும் அவர் கூறினார்.

ஏற்கனவே புலிகளால் தடுத்து வைக்கப்பட்டுள்ள சிப்பாயைப் பார்வையிடுவதற்காக 3 தடவைகள் சென்றிருந்தோம். அத்துடன் கடந்த பெப்ரவரி மாதம் குறித்த சிப்பாயின் உறவினர்களையும் அங்கு அழைத்துச் சென்றோம். - என்றும் செஞ்சிலுவைச் சங்கப் பேச்சாளர் மேலும் தெரிவித்திருக்கிறார். (சி)

# கொழும்புக்கு மின் வழங்கும் பிரதான 'கேபிள்' சேதம்

''கொழும்பு நகருக்கு மின்விநியோகம் செய்யும் பிரதான நிலத்தடி 'கேபிள்' இணைப்பு சேதப்படுத்தப்பட்டுள்ளது. இதன் திருத்த வேலைகளுக்கு ஒரு கோடி 50 லட்சம் ரூபாவுக்கு மேற்பட்ட தொகை தேவை என இலங்கை மின்சாரசபை பிரதம பொறியியலாளர் (செயற்பாடு) பி.என். திஸாநாயக்க தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் பின்வருமாறு விளக்கியுள்ளார்.

''இனந்தெரியாத குழுவொன்று அகழ்வுப் பணியின்போது, இந்த 'கேபிள்' இணைப்பை சேதப்படுத்தியுள்ளது. கொலன்னாவையிலிருந்து, இந்த முக்கிய 'கேபிள்' மூலமாகவே, கொழும்புக்கு வழமையாக மின்சாரம் விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

''இந்த முக்கிய விநியோகப் பிரிவில் கோளாறு ஏற்படும் பட்சத்தில் மாற்று நடவடிக்கை மேற்கொள்ளப்படும். அப்போது பன்னிப்பிட்டியவிலிருந்து விநியோகம் பெறப்படும். தற்போது கொழும்புக்கு, பன்னிப்பிட்டியவிலிருந்தே மின் விநியோகம் பெறப்படுகிறது.

''எனினும் மாற்றுவழி மூலமாக மின் விநியோகத்தை மேற்கொள்ள முடியாதுள்ளது. சேதப்படுத்தப்பட்ட 'கேபிள்' திருத்தியமைக்க, குறைந்தபட்சம் இரு மாதங்களாகலாம். இச் சேதத்தால், தேசிய மருத்துவமனைக்கும், மருதானை, கொழும்பு 4,5,7 ஆகிய பகுதிகளுக்குமான மின் விநியோகம் தடைப்பட்டுள்ளது.

''சேதப்படுத்தப்பட்ட கேபிளை திருத்த ஆஸ்திரேலிய பொறியியலாளர்களை வரவழைக்க விருக்கின்றோம். இந்த முக்கிய 'கேபிள்' முன்னர் அவர்களாலேயே பொருத்தப்பட்டது- என்றார். (சி)

## உதயன்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சம்பவத்தை அது முழு அளவில் கவனிக்கும் என்றும் குழுவினர் தெரிவித்தனர்.

இந்த உயர்மட்டக் குழுவின் அலுவலகம் 24 மணிநேரமும் விரைவில் இயங்கத் தொடங்கும் என்றும் -

மக்கள் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் செய்யும் முறைப்பாடுகளை உடனுக்குடன் உள்வாங்கவும், விரைந்து பொருத்தமான நடவடிக்கைகளை பாதுகாப்பு மற்றும் பொலிஸ் தரப்பு மேற்கொள்ள வழிகாட்டி கண்காணிக்கவும் இக்குழு நடவடிக்கை எடுக்கும் என நேற்றைய சந்திப்பின்போது குழுவினர் பத்திரிகை ஆசிரியரிடம் தெரிவித்தனர்.

கடத்தல்கள், காணாமற்போதல் போன்ற விடயங்களைத் தடுத்து நிறுத்தி, ஆக்கபூர்வமான பெறுபேற்றைப் பெற்றுத்தர முடியாவிட்டால் இக்குழு தானாகவே தனது பணியிலிருந்து - அறிவித்துவிட்டு - ஒதுங்கிக்கொள்ளும் என்றும் குழுவினர் தெரிவித்தனர்.

தமது இல்லத்துக்கு புதன் மதியம் 11.30 மணியளவில் வெள்ளை வானில் இனந்தெரியாதோர் வந்தபோது தாம் அலுவலகத்தில் இருந்தார் என்றும் -

தொடர்மாடி இல்லக் காவலாளியை அச்சுறுத்தி 'சுடர் ஒளி' ஆசிரியரைப் பற்றி விசாரித்தபோது, காவலாளி, 'சுடர் ஒளி' ஆசிரியர் இரண்டு நாள்களுக்கு முன்னர்தான் வீட்டை விற்றுவிட்டு வேறு எங்கோ சென்றுவிட்டார் எனக்கூறிச் சமாளித்தார் என்றும் -

பத்திரிகை ஆசிரியர் மேற்படி உயர்மட்டக் குழுவினரிடம் தகவல் தெரிவித்தார்.

தமது புதிய இல்லம் எங்கே என்று கேட்டு காவலாளியை விசாரித்தனர் என்றும் -

அது தமக்குத் தெரியாது எனக் கூறிச் சமாளித்த காவலாளி, சம்பந்தப்பட்ட நபர் ஒருவரின் அடையாள அட்டையைக் கோரியபோது, 'கேட்ட கேள்விக்குப் பதில் கூறினால் போதும்' என்று கடுந்தொனியில் அவர் அச்சுறுத்தப்பட்டார் என்றும் - குழு வினருக்குப் பத்திரிகை ஆசிரியர் தெரிவித்தார்.

மேல்நடவடிக்கைகள் குறித்து தாங்கள் தொடர்பு கொண்டு கலந்துரையாடுவர் எனக் குழுவினர் பத்திரிகை ஆசிரியருக்கும், நிர்வாக இயக்குநருக்கும் தெரிவித்தனர்.

இதற்கிடையில் -

'உதயன்', 'சுடர் ஒளி' ஆசிரியரின் இல்லத்துக்கு வெள்ளைவான் சென்ற விவகாரம் குறித்து ஜனாதிபதியின் ஊடக ஆலோசகர் ஏ.எச்.எம். அஸ்வர் மற்றும் மேல் மாகாண ஆளுநர் அலவி மௌலானா ஆகியோர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் கவனத்துக்குக்கொண்டு வந்து உரிய நடவடிக்கை எடுக்கக் கோரியுள்ளனர் என்று தெரியவருகின்றது.

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் 'உதயன்', 'சுடர் ஒளி' நிர்வாக இயக்குநர் மற்றும் ஆசிரியருடன் தொடர்பு கொண்டு விடயங்களைக் கேட்டறிந்ததுடன் தமது கவலையையும் தெரிவித்தார். இவ்விடயத்தைத் தமது கட்சி இன்று நாடாளுமன்றில் எழுப்பும் என்றும் அவர் நேற்று மாலை குறிப்பிட்டார்.

## பஸில்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கள் உட்படப் பல்வேறு விடயங்கள் குறித்து இச் சந்திப்பில் விரிவாக ஆராயப்பட்டது.

தமது மாவட்டங்களில் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக அரச அதிபர்கள் அவரிடம் விரிவாக எடுத்துக் கூறினர் என அறியவந்தது. (அ-1)

## மங்கள.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தாம் எந்நேரத்திலும் தயார் என்றும் மங்கள சமரவீர, அறிவித்தார்.

இனம், மதம், கட்சி போன்ற வேறுபாடுகளைக் கருத்திற்கொள்ளாது - இலங்கை கடவுச்சீட்டே இல்லாத ஒருவரின் கீழ் உள்ள - மஹிந்தவின் ஆட்சியால் அழிந்துகொண்டு போகும் இந்த நாட்டை மீட்டெடுப்பதற் காக அனைவரும் தமது கட்சியில் சேர்ந்து செயற்பட முன்வர வேண்டும் என்று மங் கள நேற்று அழைப்பு விடுத்தார்.

மங்கள சமரவீர மற்றும் சிறிபதி சூரியாராய்ச்சி ஆகியோர் ஒன்றிணைந்து நேற்று ராஜகிரியவில் உள்ள 'மௌபிம' பத்திரிகை அலுவலகத்தில் புதிய கட்சி உருவாக் கம் தொடர்பாக ஊடகவியலாளர்களுக்கு விளக்கமளித்தனர். அப்போதே மங்கள மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

எனது அரசியல் வாழ்க்கையில் மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சியைப்போல் ஒரு மோசமான ஆட்சியை நான் ஒருபோதும் கண்டதில்லை.

மஹிந்தவின் குடும்ப ஆட்சி தலைதூக்கி நாட்டைச் சீரழித்து வருகிறது. இலங்கை கடவுச் சீட்டே இல்லாத - இலங்கை பிரஜா உரிமை இல்லாத - ஒருவராலேயே இந்த நாடு ஆளப்பட்டு அழிக்கப்பட்டு வருகிறது.

கட்சிக்குள் எவரும் கருத்துக்கூற முடியாது. கூறினால் அவர்கள் மறுகணமே கட்சிக்கு வெளியே வீசப்பட்டு விடுவார்கள்.

எனக்கும் சிறிபதிக்கும் நடந்தது என்ன? கட்சிக்குள் நடக்கும் ஊழலைச் சுட்டிக்காட்டினோம். அதற்கு எதிராகக் குரல் கொடுத்தோம். அதன் காரணமாகவே நாம் அமைச்சுப் பதவியில் இருந்து நீக்கப்பட்டோம்.

இந்த அரசு இனவாதத்தை அடிப்படையாகக் கொண்டுதான் ஆட்சி நடத்துகிறது. தமிழ், முஸ்லிம்கள் எண்ணிக்கையில் சிறுதொகையினராக இருக்கலாம். ஆனால், அவர்கள் எல்லோரும் எம் நாட்டு மக்கள். அவர்களின் அத்தனை உரிமையும் பாதுகாக்கப்படவேண்டும். ஆனால், மஹிந்த வின் அரசோ தமிழ், முஸ்லிம்களை அழிக்க முற்படுகிறது.

### பிரபாகரனுக்குக் கிடைத்த நல்ல ஜனாதிபதி மஹிந்தா

கொழும்பு லொட்ஜ்களில் தங்கியிருந்த தமிழ் மக்களை பஸ்களில் ஏற்றி அனுப்பினார் மஹிந்த. இதன்மூலம் புலிகளுக்குத் தான் லாபம். உண்மையில் சொல்லப் போனால் மஹிந்த பிரபாகரனுக்குக் கிடைத்த மிக நல்ல ஜனாதிபதி. புலிகள் தங்கள் செயற் பாட்டை விஸ்தரித்துச் செல்ல மஹிந்தவின் ஆட்சிதான் சரியானது.

இலங்கை அரசால் மேற்கொள்ளப்படும் மனித உரிமை மீறல் நடவடிக்கைகள் பற்றி சர்வதேச நாடுகள் கேட்டால், புலிகளால் மேற்கொள்ளப்படும் மனித உரிமை மீறல் கள் பற்றி ஏன் அந்நாடுகள் கேட்பதில்லை என்று அரசு கேட்கின்றது.

இது எவ்வளவு முட்டாள்தனம். புலி கள் வன்முறையில் ஈடுபடுபவர்கள். புலி கள் செய்வதை இந்த அரசும் செய்வதால் புலிகளும் அரசும் ஒன்றா?

இந்த ஆட்சி இப்படியே தொடர்ந்தால் இலங்கை சூடான்போல் மாறிவிடுவது நிச்சயம். இந்த அரசின் மோசமான செயற் பாடுகளால் சர்வதேச நாடுகள் இலங்கைக்கு இனி ஆயுதங்களை வழங்கவும் முன்வராது. புலிகளைப் போல் திருட்டுத்தனமாகத் தான்இலங்கை ஆயுதங்களைக் கொள்வனவு செய்யும் நிலை ஏற்படும்.

ஆகவே, இந்த அரசைத் திருத்தவோ அல்லது தவறும் பட்சத்தில் ஆட்சியைக் கவிழ்ப்பது கட்டயமாகியுள்ளது. இதற்காகவே ஸ்ரீல. சு. கட்சி மக்கள் பிரிவுடன் எல் லோரையும் ஒன்றிணைய அழைப்பு விடுக் கின்றோம்.

## தமிழ்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சித் தேர்தலை நடத்துவதற்கு முகமாலையில் கொத்தணி முறையில் வாக்குச்சாவடி கள் நிறுவப்பட வேண்டும். இப்போதைய போர்ச் சூழ்நிலையில் அது நூற்றுக்கு நூறு சாத்தியமற்றது என்று கிளிநொச்சி, முல் லைத்தீவு அரசாங்க அதிபர்கள் சுட்டிக் காட்டியதாகவும் அறியவந்தது.

தேர்தல் ஆணையாளருடனான நேற்றைய சந்திப்பில் யாழ்ப்பாணம் அரசாங்க அதிபர் கே.கணேஷ், கிளிநொச்சி அரசாங்க அதிபர் நா.வேதநாயகன், முல்லைத்தீவு அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா சுகுமார், மன்னார் அரசாங்க அதிபர் எஸ். விஸ்வலிங்கம், வவுனியா அரசாங்க அதிபர் எஸ்.சண்முகம், மட்டக்களப்பு பதில் அரசாங்க அதிபர் எஸ்.மகேசன் ஆகியோர் பங்குபற்றினர்.

திருகோணமலை, அம்பாறை மாவட்டங்களில் கடந்த வருடத்தில் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்கள் மார்ச் மாதம் 30ஆம் திகதி நடைபெற்று முடிந்தன. அதனால் அந்த இரண்டு மாவட்டங்களின் அரசாங்க அதிபர்களும் நேற்றைய சந்திப்புக்கு அழைக்கப்படவில்லை. நாடளாவிய ரீதியில் உள்ளூராட்சி சபையின் தேர்தல் 2006 மார்ச் மாதம் 30ஆம் திகதி நடைபெற்றதுக் குறிப்பிடத்தக்கது.

மேலே குறிப்பிட்ட ஆறு மாவட்டங் களிலும் மொத்தம் 42 உள்ளூராட்சி சபை களுக்கான தேர்தல்கள் கடந்த வருடம் நடத் தப்படாமல் இம்மாதம் 30ஆம் திகதி (30.06.2007) வரை தேர்தல் ஆணையாளரால் ஒத்திவைக்கப்பட்டது.

யாழ். மாவட்டத்தில் 17 உள்ளூராட்சி சபைகளும், கிளிநொச்சி மாவட்டத்தில் 03 உள்ளூராட்சி சபைகளும், முல்லைத் தீவு மாவட்டத்தில் 03 உள்ளூராட்சி சபை களும், வவுனியா மாவட்டத்தில் 05 உள்ளூ ராட்சி சபைகளும், மட்டக்களப்பு மாவட்டத்தில் 09 உள்ளூராட்சி சபைகளும் இதில் அடங்குகின்றன.

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக் குடியிருப்புப் பிரதேச சபைக்கான உறுப் பினர்கள் போட்டியின்றி தேர்தல் இல்லாமலே தெரிவு செய்யப்பட்டிருந்தனர்.

அரச அதிபர்கள் அறுவரும் தெரிவித்த கருத்துக்களின் அடிப்படையில் உள்ளூராட்சி சபைகளின் தேர்தல் மீண்டும் ஒத்தி வைக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. (அ-1)

## யாழ்.பல்கலை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இராஜரட்ணமும் இந்தத் துணை வேந்தர் தேர்தலில் போட்டியிட்டார்.

தெரிவு செய்யப்பட்ட மூவரின் பெயர்கள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவுக்கு அனுப்பிவைக்கப்படும்.

மானியங்கள் ஆணைக்குழு ஜனாதி பதியின் சிபார்சின் பேரில் துணைவேந் தரை நியமிக்கும். (அ-50)

நியூட்டன் அக்கடமி
A/L 2009
சோண்டாவில் தமிழ் திரு. அமரசிவம்
ஆரம்பம்: 23.06.2007 Sat 1 p.m.
(ஆரம்பத்திலிருந்து கற்பிக்கப்படும்)

SUBRA [14]
சித்தன்கேணி
2007 A/L
மாணவர்களுக்கான முன்னோடிப் பரீட்சையும் கருத்தரங்கும்
தமிழ் : குழந்தைவேல்
08/09/10 இல் July
அளவையில் E.S. பவன்
25.06.2007 மாலை 2.30 மணி அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டவை. உங்கள் வெற்றியை உறுதிப்படுத்த இறுதிச் சந்தர்ப்பம்.

துரித தபால்கள், பொதிகள் சேவை
உள்நாட்டு, வெளிநாடுகளுக்கு கடிதங்கள்
உணவுப் பொருள்கள், அன்பளிப்பு பொருள்கள்,
உடுபுடைவைகள் மற்றும் VDO பிரதிகள்,
CD க்கள் என்பன ஏற்றுக்கொள்ளப்படும்.
திருமுருகன் கொம் நெற்
259, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி - 021 222 7835 (ஆல்சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ் முன்னால்)
46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி தொலைபேசி - 021 222 7310 (நல்லூர்ப.நோ.கூ.சங்கம் முன்னால்)

Softview Computer Systems
No.778, K.K.S. Road, Thaddatheru Junction, Jaffna.
FOR SALES

| | |
|---|---|
| Flash Drive | 650/- |
| 478 Motherboard | 8750/- |
| CD ROM | 2200/- |
| LQ 300, 800Ribbon | 525/- |
| Kingston DDR Memory | 3400/- |

2180,70 Ribbon, VGA Card, Optical Mouse, USB keyboard, DVD writer, Headphone, Sound Card, USB cub, hp toner (6L), hp laser jet 1020 printer.

விசேட சலுகையில் கணனிக்கல்வி யூன் 29 மட்டுமே
Diploma Courses
Microsoft Office, Desktop Publishing, C++, Visual Basic, AutoCAD, Kids Programming, Hardware Engineering, Internet E-mail, V.B Net, Computerized Accounting
Softview Computer College
55, Arasady Road, Jaffna. T.P: 021 2225170

தேர்வின் வெற்றிக்கான
மாபெரும் கருத்தரங்கு
புவியியல் திரு. பாபு
A/L 2007
குறிப்பு: வெளி மாணவர்கள் 100 பேருக்கு மட்டுமே அனுமதி வழங்கப்படும். 28.06.2007 இற்கு முன் அனுமதிகளைப் பெற்றுக்கொள்ளவும்.
விக்னா கல்வி நிறுவனம்
தலைமையகம்: 52, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

PC Park
partner of computer people
வழங்கும் அதிரடி OFFER
Rs.49,000.00
Intel Pentium 3.0 GHz (2MB 800MHz)
Intel Core 2 Duo Motherboard
512 MB Kingston (533MHz) DDR 2 Ram
80 Gb SATA (7200 rpm) Harddisk/Samsung
Asus Combo Drive SATA
15' Viewsonic Monitor
ATX 450 W 24pin Power Casing
A4 Tech Keyboard
A4 Tech Mouse
கையிருப்பு உள்ளவரை மட்டுமே.
Tel : 021-222 9581
#633, K.K.S Road, Jaffna. Hotline :0773068998

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) [illegible] வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 22.06.2007இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org